# விடியலுக்கான விலாசங்கள்

## போர்க்காலக் கவிதைகள்



ஆய்வுத்திலகம்

மௌலவி

**காத்தான்குடி பௌஸ்**


(ஷர்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுக்கான விலாசங்கள்

கவிதைத் தொகுதி




'ஆய்வுத்திலகம்' மௌலவி.

காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)

23/6, லைனி மன்ஸில்,

வத்தல்பொல-பாணந்துறை.



University ... LIBRARY 06 DEC 2021

704454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விடியலுக்கான விலாசங்கள் |
| நூலாசிரியர் | : | மௌலவி காத்தான்குடி பௌஸ் |
| உரிமை | : | நூலாசானுக்கே ©® |
| மொழி | : | தமிழ் |
| தன்மை | : | கவிதைத் தொகுதி |
| முதற்பதிப்பு | : | 2014.03.01 |
| தாள் | : | பேங்க் 80 கிறவுண் |
| நூலளவு | : | 1/8 கிறவுண் |
| எழுத்து வகை | : | NC நவீன எழுத்தமைவு |
| அச்செழுத்து | : | 12 புள்ளி |
| பைண்டிங் | : | இயந்திர ஒட்டு |
| அச்சிட்டோர் | : | V4U அச்சக இல்லம்<br>6/1, சுற்றுவட்ட வீதி,<br>ஹேனமுல்லை, பாணந்துறை.<br>038 567 0 657 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

வில்லாடிய பத்ர்
பல்லாடிய உஹத்
கல்லாடிய அகழ்
சொல்லாடிய தபூக்
எல்லாப் போர்களிலும்
வெல்லும் மனசுடன்
வீறு நடைபோட்ட
வள்ளல் நபியே!
உங்களுக்கு இந்நூல்
காணிக்கை!

Peradeniya
06 DEC 2021
LIBRARY
704454
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## முஸ்லிம் எழுத்தாளர்கள் போர்க்கால இலக்கியங்கள் படைக்கவில்லை?

கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட **"மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்"** என்ற கவிதைத் தொகுதி காத்திரமான ஒரு தொகுப்பாகும். பல்பத்து உணர்ச்சிக் கவிஞர்களின் ஆக்ரோஷமான கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பின் முன்னுரையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

1990 ஆம் ஆண்டு வடபுல முஸ்லிம்கள் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டார்கள். 1990 இல் கிழக்கு மாகாண பள்ளிகளில் நடத்தப் பட்ட படுகொலைகள். இந்திய இராணுவத்தினால் திட்டமிட்டு நடத்தப் பட்ட கொலைச் சம்பவங்கள். முஸ்லிம்களின் சொத்து உடைமைகளை விடுதலை இயக்கங்கள் திட்டமிட்டு சூறையாடியமை என்பவை முஸ்லிம்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளாகும். ....

**மீஸான் கட்டைகள்...** நூலில் பாடியிருக்கின்ற கவிஞர்கள் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, மேடைகளிலும் இணையங்களிலும் காட்சிப்படுத்திய இக்கவிதைகளை இன்றைய ஆய்வாளர்கள் படித்திராது விட்டாலும் மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்களையாவது படித்துத் தெரிந்துகொண்டிருக்கலாம்.

அந்த வகையில் தற்போது முஸ்லிம்களின் போர்க்காலக் கவிதைகள் பற்றிய விபரங்களையும் கவிதைகளையும் **மௌலவி காத்தான்குடி பௌஸ்** உள்ளடக்கி, **விடியலுக்கான விலாசங்கள்** என்ற ஆரோக்கியமான இந்நூலைத் தந்திருப்பது மகிழ்ச்சியளிக் கின்றது. மேலும் உற்சாகமளிக்கின்றது. உலக அரங்கில் நடைபெறும் யுத்த நிகழ்வுகளை கண்முன்னே தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சமர்ப்பணப்பாடலின்.

**"வில்லாடிய பதர்**

**பல்லாடிய உஹத்**

**கல்லாடிய அகழ்**

**சொல்லாடிய தபூக்"**

போன்ற வரிகள் சிலாகிக்கத்தக்கவையாக அமைந்துள்ளன.

யுத்த காலத்தில் அமைச்சர் மர்ஹூம் M.H.M. அஷ்ரப். மர்ஹூம் அன்பு முகைதீன். S.A. தீரன், வாழைச்சேனை அமர். M.A. நுஃமான், தாஸீம் அஹமது, அஷ்ரப் ஷிகாப்தீன். ஜின்னாஹ் ஷரீபுத்தீன், சோலைக்கிளி அதீக், M.L.M. அன்ஸார். மௌலவி காத்தான்குடி பௌஸ், மூதூர் முகைதீன், H.A.அஸீஸ், M.A. அபூதாஹிர், A.M.M. நஸீர், அன்புடீன், ஓட்டமாவடி அரபாத், M.M.M. நகீப், N.ஆத்மா, S. நளீம், வாலை இபுனு ஹஸன், உஸ்மான் மரிக்கார், அனார், A.H.M. ஜிப்ரி, நியாஸ் A. ஸமத், H.M. ஜாபிர், அஸாத் M. ஹனீபா போன்ற கிழக்குக் கவிஞர்களும் யாழ் அஸீம், முல்லை முஸ்ரிபா. S.H. நிஃமத், உவைஸ் கனி, யாழவன் அமீர், கலைவாதி கலீல் போன்ற வடபுலக் கவிஞர்களும் பன்னா மத்துக் கவிராயர், பாஹிமா ஜஹான், சம்ரான், ரவுப் ஹஸீர், நஜ்முல் ஹுஸைன் போன்ற பிற பிரதேசக் கவிஞர்களும் முஸ்லிம் களுக்கு நடந்த கொடுமைகளுக்கெதிராகக் கிளர்ந்துள்ளனர்.

அந்த வேகத்தில் நூலாசிரியர் பௌஸின் போர்க்கால இலக்கியப் பங்களிப்பு ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை காலத்தின் கல்வெட்டாக அமைந்துள்ளது. இந்நூலை வாங்கி வாசித்து பயனடையுங்கள்!

**கலைவாதி கலீல்**

**முன்னாள் உப பீடாதிபதி,**

**ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,**

**அளுத்கமை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....


- தாய்க்குலமே! 007
- திருடர்கள் 009
- கடலை நோக்கி... 010
- காந்தியின் இறப்புக்கு கண்ணீர் விடும் மனச்சாட்சி 012
- சுவனத்து ஷுஹதாக்கள் 016
- வரலாற்றின் முகவரிகள் 020
- முஸ்லிம்களாய் நாங்கள்... 021
- சுபஹின் அதான் 023
- ஆயிரமாம் ஆண்டின் அறிவுரை 025
- எலெக்ஷன் ஸ்பெஷல் 027
- காலக்கவிஞனின் பேனா 030
- கல்லறை காவலர்கள் 031
- அமெரிக்காவில் இருந்து ஆப்கான் வரை... 033
- செக் பொயின்ட் 036
- கணனி வேண்டும் 042
- முத்தையா முரளி 044
- அறிவாய்! கேள்!! 045
- மன அலை மதிப்பீடு 046
- பிட்டு வாங்கிய குட்டு 048
- புஸ்... புஸ்... புஸ்... 049
- நோக்கம் நுணுக்கம் 052
- நோன்புப் பெருநாள் 053
- கொக்கா கோலா 055
- ஒற்றுமைப்பெருநாள் 057
- கரைச்சலோ கரைச்சல் 056
- இனந்தெரியாதோரால் மலிந்த இலங்கை 059
- முஸ்லிம்களின் இனப்பிரச்சினை 061
- நவயுக நடப்புக்கள் 065
- அமைதிப் பெருநாள் 068
- ஊரைப் பார்ப்போமா? 069
- சதாம் ஒரு வீரன் 071
- உம்மத்தின் கண்ணீர் 074
- எங்கள் ஷுஹதாக்களின் இனிய நாள்! 076
- விடை தா பெருநாளே! 079
- எழுச்சி கொள்ளும் இன்ப நாள்! 081
- எதிர்காலம் இஸ்லாத்திற்கே! 089
- சமாதானப் பெருநாள் 090
- முடிவுகள் 091
- கிழக்கு மக்களை கிண்டல் செய்யாதீர்! 092
- பாபரி மஸ்ஜிதும் பாரதத் தாக்கமும் 094
- அக்கினிக்குள் அல்குர்ஆன் 097
- கண்ணூறாங்களாம்; கல்புறாங்களாமா? 099
- முஸ்லிம் எம்பிக்கள் முஸாபகா செய்வார்கள்? 101
- மழை முடிந்ததும் பொழுதும் விடிந்தது! 104
- மறக்க முடியாத மண்டேலா! 105
- சமாதானத் தந்தை மண்டேலா! 107


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்குலமே!

வாய்விட்டு அழுகிறோம்!
உங்கள்
சேய்களுக்கு சியோனிஷ்ட்
வாதிகள் செய்யும்
கொடூர அநீதிகளைக்
கொஞ்சம் அறிந்துள்ளோம்!
சுடுவெயிலில் பாலஸ்தீன
மண்வெளியில்
இழுத்து உங்கள் மார்புகளில்
ஏற்பட்ட
பழுத்த காயங்களால் நீங்கள்
அழும் ஓசையைக் கேட்கின்றோம்.

▣ ▣ ▣

மருத்துவ மனையில் உங்களது
கருப்பைகளை
அறுத்துப் பிய்த்து
தெருக்களில் எறியும்
அரக்கர்களின்
மிருகத்தனத்தை
அறிகிறோம்
பலஸ்தீனத் தாய்மார்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்காலம்
வருகிறது!

▣ ▣ ▣

நாடெங்கும்
பலஸ்தீனப் பாலம்
அமைகிறது.
ஓலமிட்டு அழும் உங்களுக்கு
வாழ்வு பிறக்கிறது.
சியோனிஷவாதிகளின்
அயோக்கியத்தனத்தால்
உங்கள் நம்பிக்கையை
இழக்காதீர்கள்.
எங்கள் பக்கமே – இறைவன்
இருக்கின்றான்.

▣ ▣ ▣

- தினகரன் 30.09.77 ஆலமுல் இஸ்லாம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்கள்

விதி விளக்குகளை
விழிக்க விடாமல்
தூங்குவதற்குத்
தூபமிடுபவர்கள்
ஊர் காவல் படையுடனும்
ஒரே எதிர்ப்பு!

◉ ◎ ◉

இரவுக் காவல்
பிராணிகளுடனும்
இரக்கமில்லாத
சீவன்கள்
மாஇலை ஆடுவதும்
மனதுக்குப் பயம்!

◉ ◎ ◉

திறப்பு இல்லாமல்
பூட்டைத் திறக்கும்
திறமைசாலிகள்
பாயும் பயிற்சி இல்லாமல்
மதில்களால் பாயும்
வீராங்கனைகள்!

◉ ◎ ◉


அடிக்கொரு
பொய் நினைப்பவர்கள்
அடிபட்டால்
உண்மை
உரைப்பவர்கள்!

◉ ◎ ◉

செய்யும் தொழிலைச்
சிறப்பாய்ச் செய்பவர்கள்
திருடர்கள்!

◉ ◎ ◉

- தினகரன் 08.09.1988 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலை நோக்கி...

கடற்கரை ஓரத்தில்
காத்துக் கிடக்கும்
விடத்தல் தீவுப் பெண்
விளைவை சிந்தித்தேன்.

❀ ❀ ❀

பொருள் தேட நோக்கில்லை!
புதை குழியும் இலக்கில்லை!
பெருகி வரும் கடலலையில்
போய்ச் சேர விரும்புகிறாள்.

❀ ❀ ❀

நீண்ட புருவமுள்ளாள்!
நீலநிறக் கண்ணுடையாள்!
பூண்டிருக்கும் புடைவையிலும்
பலவர்ணம் காட்டுகிறாள்.

❀ ❀ ❀

ஏன் இந்த நோக்கம்!
இதயமோ தாக்கம்!
காண்பார்க்கு ஏக்கம்!
கவலைக்கு யா தூக்கம்?

❀ ❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் அவள் நிலையை
சரிகாண யாருள்ளார்!
அமுதூட்டும் தாய் தந்தை
அனைவரும் இறந்தானார்!

❁ ❁ ❁

இன்று வயதிருப்பது!
இளம் காலை மீளிருது!
கண்ணுறங்கிக் கற்பினைக்
காப்பது தான் இடிக்குது!

❁ ❁ ❁

சமூகம் மறந்தது!
சரிபங்கை மறுத்தது!
இம்முறையால் இளம் கால்கள்
இக்கடலை நோக்குது!

❁ ❁ ❁

- தினகரன் இளைஞர் இதயம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியின் இறப்புக்கு கண்ணீர் விடும் மலர்த்தட்டு

எங்கள் நாட்டின்
ஏற்றமிகு தலைவரே!
உங்களை வரவேற்று
வாழ்த்து -
வழங்கும் போதெல்லாம்
வந்து பார்ப்பவர்கள்
நாங்கள்தான்!
நாங்கள்
நறுமணம் கமழும்
மலர்கள்!
அதனாற்றான்
மாலைகளாக
மலர் கொத்துக்களாக
உங்கள் கரங்களிலும்
உங்கள் கழுத்திலும்
காலா காலம்
காட்சி தந்தோம்!

✧ ✧ ✧

ராஜீவ் காந்தியெனும்
இனிய தலைவனே!
ஜவஹர்லால் நேருவும்
இந்திரா காந்தியும்
இந்திய மண்ணின்
இனிய சொத்துக்கள்
முறையில் உங்களுக்கு
மம்மி - கிராண்ட் டடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்
அஸ்தமித்ததற்கும்
அற்புத வரலாறே
உண்டு!
காவலின் கரங்கள்
ஆடியே
கணப்பொழுதில்
உங்கள் அம்மா
உலகத்தாருக்கு
வணக்கம் சொன்னார்கள்
பாரதத்தின் கண்கள்
கலங்க
சமாதியுற்றார்கள்!

✧ ✧ ✧

அம்மாவின் சாவுக்கு
நீங்கள்
தீமூட்ட
வரும்போது
ஓரத்தில் இருந்து
ஒன்றும் அறியாத
கண்ணீர் சிந்திய
பூக்கள் நாங்கள் தான்
அம்மாவின் பின்னே
ஆட்சிக்கு வந்த ராஜீவே!

✧ ✧ ✧

**உங்கள் ஆட்சியில்**
**ஏற்பட்ட மலர்ச்சியில்**
**எங்கள் மனசு**
**மிகவும் மகிழ்ச்சி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாற்றான்
இவ்வளவு கொழுந்து
நிறம் விட்டு
இருக்கின்றோம்.
இப்போதும் கூட
இந்தியத் தேர்தலில்
வெற்றி பெறுவீர்கள்
வரலாறு அமைப்பீர்கள்
என்ற நோக்கில் தான்
இனியதாய் வாழ்த்திட
நாங்கள் வந்தோம்
இடை வழியில்
எங்களுடன்
பழக்கமே இல்லாத
பசளையொன்று
பக்கத்தில் இருந்தது
அம்மா இந்திராவின்
உடலில் வந்த
துப்பாக்கி மருந்தின்
துர்வாடை
இந்தப் பசளையிலும்
வீசுகின்றது
இதனால் - இது
ஆபத்தான கேஸ்!

✧ ✧ ✧


ராஜீவ் அவர்களே
வாழ்த்துச் சொல்ல
நாங்கள் வந்தாலும்
எங்களைக்
கைக்கெடாதீர்கள்
தலைவரே!
மேடைக்கு வந்து
விட்டீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்க வேண்டாம்!
வாங்க வேண்டாம்!
மலர்கள் பேசுகின்றோம்.
உங்கள் உயிர்
உள்ளே இருக்கும்
பம்மில் இருக்கிறது.
வாங்கவேண்டாம்!
விடைபெறுகின்றோம்!
ஐயோ...!
அந்த ராஜீவும்
சந்திரனாய் இலங்கி
அஸ்தமனமானார்கள்!

✧ ✧ ✧

- 10.06.1991 தினகரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவனத்து ஷுஹதாக்கள்!

ஷுஹதாக்கள் நாங்கள்
சுவர்க்கத்திலிருந்து
சுருக்கமாய் கூறுகின்றோம்!
எங்களின் - இனிய
இரத்த பாசங்களே!
உங்களை விட்டுப்
பிரியும் போது
இஷா- என்ற
இரவுத் தொழுகையை
ஞாபகப்படுத்தி
வீட்டை விட்டு
வெளியே வந்தோம்.

சின்னஞ்சிறுசுகள்
குர்ஆன் ஓதுகின்ற
குரலோசை கேட்க
அந்த வீதியால்
நடந்து வந்தோம்.

"சோறு தின்டிட்டு
படுங்க" மகளென்று
சுலைஹா ராத்தா
சொல்லித் தீர்க்கையில்
அந்த வீதியால்
அவசரமாய் வருகின்றோம்.

வழமையைவிட
வரிசையில் ஆட்கள்
"ஸப்பு" நிறைய
சரளமாய் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாய் சொல்லும்
"கதுகாமதுஸ் ஸலாத்"
முஅத்தின் வாயால்
முழங்கித் தீர்த்தது
⍓ ⍓ ⍓
தொழுகைக்கு எழுங்கள்
என்ற
தொனிதான் அது
வீட்டுக் கெவரும் - கண்
விழித்துப் போ கொண்ணா
நீட்டுக்குப் போவோம்
நெடுகும் சுவனம் தான்
வேட்டுத் தான் நமக்கு
விபரம் தெரிந்து கொண்டா
"கதுகாமதுஸ் ஸலாத்
காரமாய்ச் சொன்னார்"
⍓ ⍓ ⍓
டுமீர்! டுமீர்!! டுமீர்!!!
பள்ளி வெடித்தது;
நிலத்தில் உருண்டோம்;
நினைவில்
கிடந்தோம்;
கலிமாச் சப்தம்
காதை இடித்தது!
எல்லோர் வாயும்
இதனை மொழிந்தது!
என்ன நடந்ததென
எமக்கே தெரியவில்லை!
இரத்த மென்றால்
எங்கும் கிடந்தது
இரண்டாம் முறையும்
டுமீர்! டுமீர் !!
பள்ளி மிம்பர்
பயணம் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பொத்தி
கையைக் கட்டினோம்.
எங்கள் உணர்வுகள்
இனிதே முடிந்தன.

எங்களின் இரத்த பாசங்களே!
உங்களை நாங்கள்
விரைவில் சந்திப்போம்
கபுறுகளில் அல்ல...
கண் அயர்ந்த கனவுகளில்
எங்கள் நிலைகளினை
இனிதே காணலாம்

ஆத்ம உலகத்தில்
இஷாவுக்கு வந்த
இரு பள்ளி ஜமாஅத்தையும்
இனிதே சந்திப்போம்
எல்லோரும் நமதூர்தான்
இருவர் ஏறாவூர்
முன் சென்ற மக்களையும்
மிக விரைவில் சந்திப்போம்.

இப்போது நாங்கள்
எங்கிருந்து கதைக்கின்றோம்;
புரிகின்றதா?
சுவனம் என்கின்ற - ஓர்
நிம்மதியின் இடத்திற்றான்
சுகமாய் கூடியிருந்து
பேசித்தீர்க்கின்றோம்.

எல்லோரும் இங்கே
இணைந்து இருக்கின்றோம்.
ஊர்த் தலைவர் உள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியுள்ள ஆசிரியர்
மௌலவியுள்ளார்கள்.
மாணவர்கள்
உள்ளார்கள்.
எல்லோரும்
இருக்கின்றார்.
இமாம் செய்த
மௌலவிதான்
எங்களுடன்
வரவில்லை!

இக்கவிதை ஷுஹதாக்களின் 100 ஆவது நாள் நினைவாக காத்தான்குடி மீரா பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கவியரங்கில் பாடிய கவிதையில் ஒருபகுதி - 1990 (புலிகளால் காத்தான்குடி பள்ளியில் கொல்லப்பட்டவர்களே: புனித ஷுஹதாக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் முகவரிகள்

இறப்பு என்றும் எமக்கு உள்ளதுதான்
இன்று இறப்போம் இல்லையெனில் நாளைக்கு
பிறப்பு என்றோ அன்றே இறப்புத்தான்
பிரியமுடன் தெரிந்து புரிந்து வாழ்கின்றோம்!
வருவோம் சுட என்று வருமுன் சொல்லியிருந்தால்
வரலாறு புரிந்திருக்கும் வந்தவர்கள் இறந்திருப்பர்!
உறைப்பு புளிக்காது ஊறுகாய் இனிக்காது.
உமறு கலீபாதான் வாள்வீச்சுக்காரர்தான்!

✧⌑✧⌑✧

இரத்தத்தைக் கண்டு ஏங்கி விழுந்த
இருதய நோயாளர் இஸ்லாத்தி லில்லை
உருக இரத்தம் கருவை அறுக்கும்
உணர்ச்சியாளரே ஸஹாபாத் தோழர்கள்
கரும்பை உண்டால் இனிக்கும் நாவு
இரும்பை உண்டால் எதுதான் இனிக்கும்!
அருமையான இளைஞரெல்லாம்
அந்த நபியின் உம்மத்துக்கள்!

✧⌑✧⌑✧

படித்தவர்கள், பாலவர்கள் படிப்பிக்கும் ஆசிரியர்கள்,
பக்திகொள் வயோதிபர் பண்பான இளைஞர்கள்
துடித்து துடித்து இறந்தார் நமைவிட்டு
தூயோனின் அரவணைப்பை ஏற்றே நின்றார்கள்
இடிஇடிக்கும் மழையோயும் எமக்கென்ன என்கின்ற
இந்தச் சிந்தனையை இனிமேலும் எடுக்காது
முடிந்தவரை குடைபிடித்து முகங்கோணா வாழ்வதற்கு
முழுமை உதாரணமே நம்மவரின் வபாத்துக்கள்?

✧⌑✧⌑✧ - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களாய் நாங்கள்

பலஸ்தீனத்தில்
அல்அக்ஸா
பறிபோன நிகழ்ச்சி
நெஞ்சத்தில்
இன்னும் நெருப்பாக
எரிகிறது!

❀ ❀ ❀

அந்த மஸ்ஜிதுள்
அகங்குளிர
நுழைந்து
அல்லாஹ்வைத்
தொழும் நாளை
நினைத்து
நிற்கையிலே . . .
இலங்கை நாட்டின்
வடகிழக்குப்
பிராந்தியத்தில்
இஸ்லாமியரை
எழுப்பிய
ஈனச் செயலால்
எத்தனை மஸ்ஜித்கள்
இன்றுவரை
நமக்கில்லை!
எண்ண இதயம்
எரிமலையாய்
வெடிக்கிறது!

❀ ❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மா முஸ்லிம்கள்
பயங்கரமாய்த்
தாக்குண்டு
பள்ளிகளை விட்டுப்
படையெடுத்து வந்த
காட்சி கண்ணுக்குள்
கருமுகிலாய்க் காணுகையில்
இதயம் துடிக்கிறது

❁ ❁ ❁

பொஸ்னியா
முஸ்லிம்கள்
குண்டுமாரிகளால்
துண்டாடப்படும் போது
மஸ்ஜித்கள் கூட
இந்த நிலைகண்டு
இரத்த அழுத்தத்தால்
இதயம் துடிக்கிறது

❁ ❁ ❁

அயோத்தியில்
தலை நிமிர்ந்த
பாபரி மஸ்ஜித்
இந்துக்களால்
உடைத்து
கீழே விழுந்தபின்பும்
முஸ்லிம்களாய்
நாங்கள் முகம்கொடுத்து
வாழ்கின்றோம்.

**நன்றி: எழுச்சிக்குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபஹின் அதான்

குமரி இருட்டுக்குள்
குப்பி லாம்புடனே
அமல் செய்ய அதிகாலை
எழுந்து தொழுதவர்கள்
நமது சமூகத்தின்
நாம் கண்ட முன்னோர்கள்
எமது பள்ளிகளில்
இன்றும் வழக்கம்போல்
சுபஹின் அதான்
சொல்லப்படுகிறது - அந்த
அதிகாலை அதான்
அனாதரவாய் ஒலிக்கிறது

◎ ◎ ◉ ◎ ◎

தூக்கத்தை விட
தொழுகை சிறப்பென்ற
தாக்கும் மந்திரத்தால்
தாக்குண்ட நம் சமூகம்
தூக்கத்தைக் கலைத்து
துரிதமாய்ப் பள்ளி சென்ற
போக்கு மாறியது;
புதுமை தோன்றியது!
காக்கும் படைகளின் கடும்
சட்டத்துக்குள்ளே
சுபஹின் அதான்
சொல்லப்படுகிறது - அந்த
அதிகாலை அதான்
அநாதரவாய் ஒலிக்கிறது.

◎ ◎ ◉ ◎ ◎


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கித் தூங்கி
துன்யா வாழ்வினையே
தீங்கின் பிறப்பிடமாய்த்
தேடிக் கொண்டவர்கள்
தூங்கு மூஞ்சுகளை
துடைத்துக் கொள்ளுங்கள்
பாங்கின் சப்தத்தில்
பக்தி கொள்ளுங்கள்
ஆங்காங்கே தொழுது
அல்லாஹ்வை
வணங்குங்கள்!

◎ ◎ ◉ ◎ ◎

சுபஹின் அதான்
சொல்லப்படுகிறது!
அஸ்ஸலாத்து ஹைறுன்
மினன்னவ்ம்!

**நன்றி :தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரமாம் ஆண்டின் அறிவுரை

இரண்டாயிரமாம் ஆண்டை
எதிர்நோக்கும் மானுடமே!
ஆயிரமாம் ஆண்டின்
ஆரம்பம் பேசுகின்றேன்
1999 எனது முந்திய
நண்பன்
காலத்துக்கும், காலத்துக்கும்
கனாக்ரேன் உண்டு
அதனால் . . .
காலமே கதைக்கின்றேன் . . .

◈ ◈ ◈ ◈ ◈

என்னை அரவணைத்த
இன்னுயிர்கள் இன்றில்லை
உண்மை பேசுவார்
ஒருவரை வஞ்சிக்கார்
கஷ்டத்துக் குதவுவார்
இன்ப மனோ நிலையில்
எத்தனையோ
கோடிப் பேர்
என்னில் வாழ்ந்தார்கள்!
எத்தனை நிம்மதி?

◈ ◈ ◈ ◈ ◈

இரவில் மானுடனும்
நிம்மதியாய் துயில் கொள்ளும்
பரபரப்பின்றியே
பாதைகள் மௌனிக்கும்
பிரயாணிகள் வாகனத்தில்
சுறுசுறுப்பாய் பயணிப்பர்.

University of Peradeniya
06 DEC 2021

704454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுப் பீதி கண்டதில்லை!
பயணத்திலும் நிம்மதி தான்!

◈ ◈ ◈ ◈ ◈

லஞ்சம் என்றால்
மானுடமே அஞ்சும்
கெஞ்சியவன் பசிக்கு
கஞ்சி உடன் கொடுப்பர்
மெஞ்ஞானம், விஞ்ஞானம்
மிக வேகமாக முன்னேற்றம்

◈ ◈ ◈ ◈ ◈

அஞ்சாமல் வாழ்கின்ற
அமைதி உலகெங்கும்
மிஞ்சி நிற்கின்ற
மிருகம் பறவைகளுக்கும்
கிஞ்சிற்றும் பயமில்லை
ஆயிரமாம் ஆண்டின்
ஆரம்பக் கட்டங்கள்!

◈ ◈ ◈ ◈ ◈

ஆயிரத் தொடிணைந்து
தொள்ளாயிரம்
தோன்றுகையில் . . .
அழுக்கு அழுக்கு
மக்கள் மனம் அழுக்கு
குண்டுப் புரளி
கொலை கொள்ளை ஏமாற்று
எல்லாம் நிரம்பி சமூகம்
பாழாச்சு!
இன்னும் சில நாட்களில் . . .
இரண்டாயிரமாம் ஆண்டு!
இண்டர் நெட் யுகம்!
மானுடமே மனிதத்தை
மதி! அன்பைப் பரிமாறு!
ஆயிரமாம் ஆண்டின்
அன்புக் கட்டளைகள்
2000 ம் ஆண்டை இனிதே மதி!

**நன்றி: நவமணி 15.08.1999**

06 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலக்ஷன் ஸ்பெஷல்

ஒன்றாயிருந்த
குடும்பம்
இரண்டாகிப் போகும்
வென்றவனும்
தோற்றவனும்
ஒன்றாவான்!

❀ ❀ ❀

வெளிச்சத்தில்
நின்றவன் மட்டும்
நிர்க்கதியில்
என்றும் இதே
கதைதான் அந்த
எலக்ஷன் வருகிறது!

❀ ❀ ❀

அண்ணனும் தம்பியும்
அடிப்பான் உதைப்பான்
பொலிஸில் கூட
புகாரும் செய்வான்
கம்பிக் கூடு . . . இல்லையேல்
எம்பி வீடு!
எல்லாம் இந்த
எலக்ஷன் கேடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி அமைப்போம்.
விவசாயக் கடன் தருவோம்.
நீதி நியாயம்
நிறைவேற்றித் தருவோம்.
காது வெடிக்கக்
கத்துவர்.
மேடை முன்னால்
கைதட்டி சந்தோஷம்!
வோட்டை எடுத்தால்
உல்லாசம்!
வாக்குறுதி
ஜலதோஷம்!

❀ ❀ ❀

யுத்தம் தீர்ப்போம்
இந்தப் பேச்சுக்குள்
பத்துப் பீரங்கி
பதறி வெடிக்கிறது.
சத்தியப் பேச்சல்ல
சனங்களின் வோட்டுக்குக்
குத்தகைப் பேச்சு
கொஞ்ச நாளைக்கே!

❀ ❀ ❀

தம்பி சுவரில்
போஸ்டர் அடிப்பான்
எம்.பி. மினிஸ்டர்.
எல்லோரும் வருவர்.
கொம்பு முளைத்தோர்
கூடத் திரிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பளந்து, வாயடிப்பர்.
வாக்கு முடிந்தால். . .
சாக்கு நிறைந்தால் . . .
பஜ்ரோ பறக்கும்;
செல்போன் கத்தும்!
பழைய குருடி
கதவைத் திறடி!

⊛ ⊛ ⊛

எலக்ஷன் என்றால்
இன்றைய மழை மூடம்
பெய்து விட்டு ஓய்ந்து விடும்.
கூறிவிட்டு
மாறுவதுதான் இன்றைய
எலக்ஷன் ஸ்பெஷல்!

**12.12.1999 நவமணி கவிதா மணிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக்கவிஞனின் பேனா

கண்ணுறங்காது
என் எழுத்துக்களுக்கு
எத்தனை கேள்விகள்?
அன்று அப்படி எழுதினீர்!
இன்று இப்படி எழுதுகிறீர்!
சொன்ன கருத்தென்ன?
சூழலுக்கு மாறுவதேன்?
கண்மூடி எழுதுகின்றாய்?
கவிஞனுக்கு வரும் கடிதம்

என் எழுத்துக்கள்
என் எழுத்துக்கள் தான்
இன்னொருவர் எழுதவில்லை
என் பேனாதான் எழுதியது
எண்ணக் கருத்துகட்கு
எனக்கு உரிமையுண்டு
என்பேனா எழுதியதும்
என் சமூகத்துக் குரிமையிது!

அன்று எழுதியது. . .
அன்றைய சிந்தனைகள்!
இன்று எழுதுவது . . .
இன்றைய சிந்தனைகள்
ஒன்று ஒன்றுக்கு
ஒப்பாகும்; வேறுபடும்!
என்றும் ஒரே கருத்தை
எழுதுவது இலக்கியமா?
கண்மூடிச் சிந்தனையோ?

**நவமணி 09.08.1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறை கானங்கள்!

வாயடித்தோன் வாயடைத்தோன்
வாயிருந்தும் நா பொறுத்தோன்
நோய்பிடித்தோன் நொந்திருந்தோன்
தாயினத்தில் தவறிழைத்தோன்
தரமற்றுப் பண முழைத்தோன்
ஆய்வுள்ளோன் அறிஞரெல்லாம்
என்னுள்ளே உறங்குகின்றார்கள்!

❧ ❧ ❧ ❧

புண்புற்றோன் பண்பிழந்தோன்
பாரினையே சுற்றி வந்தோன்
கண்ணுற்றோன் கண்கெட்டோன்
காசினியைக் கலக்கி விட்டோன்
தண்டித்தோன் தெண்டித்தோன் - கழுத்தை
துண்டித்தோன் துண்டானோன்
என்றெல்லாம் என்னுள்ளே
எண்ணற்று உறங்குகின்றார்கள்!

❧ ❧ ❧ ❧

இத்தனை பேர் அமைதியினை
இழி செயலின் தண்டனையை
கத்தியழும் காட்சிகளை
கவலை கொள் சோகத்தை
கத்த உடல் அழிந்து போய்
சதை சுமந்த எலும்புடனே
இத்தரையில் இவரையெல்லாம்
என்னுள்ளே மறைத்துள்ளோன்!

❧ ❧ ❧ ❧

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ளோர் சுகத்தினையும்
இழிவுள்ளோர் படும் துன்பச்
சங்கதியை காட்டாமல்
சமாளித்து வருகின்றேன்!
எங்கும் மண்ணறையை
என்றும் நினையுங்கள்!
உங்களுக்கு நாங்களுள்ளோம்.
எங்களுக்கு நீங்களுள்ளீர்கள்!

**நவமணி 27.09.1990**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து ஆப்கான் வரை....

அந்தத் தலை(ப்பாக்)குள்
உஸாமாவின் அஸாவுக்குள்
இந்த அமெரிக்கா
இப்படிக் கிறுகியதா?

✈ ✝ ✈

அன்பான உஸாமா
அமெரிக்காவைத்
துண்டித்து வாழத்
துணிந்ததும் ஏனோ?

✈ ✝ ✈

காலம் காலமாய்க்
கலிமாச் சொன்னவன்
கோலமாய் இறப்பதைக்
குத்திக் காட்டியதா?

✈ ✝ ✈

ஆயுத மழையின்
அவலம் உறுத்தியதா
பாயும் குப்ரின்
பாதங்கள் தெரிந்தனவா?

✈ ✝ ✈

அல் அக்ஸா மண்ணின்
அகமியம் உறுத்தியதா?
முல்லா உமர் போன்றோர்
மூளை உசுப்பியதா?

✈ ✝ ✈

துப்பாக்கி கைக்கெடுத்து
துடைத்தது போதும்
அப்பாவி உயிர்களுக்கு
ஆளுமை கேட்டீரா?

✈ ✝ ✈

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் ஆட்சிகளில்
மழுங்கும் இஸ்லாத்தின்
பின்னணி கண்டு
பலத்தைச் சேர்த்தீரா?

ஹலோ புஷ் ஜனாதிபதி
கிலோ கணக்கில் வெடிகுண்டு
பலோ பண்ணிப் போட்டு
பலன் என்ன கண்டீர்?

அதாபு தரும் அமெரிக்கா
அசுரப் போக்குக்கு
சதாம் தந்த பாடம்
சரித்திரத்தில் மறந்திடுமா?

இஸ்ரேலைத் தூண்டிவிட்டு
இஸ்லாமியரை அழிக்கின்ற
புஷ் போன்றோர் போக்குக்கு
பூமி பதில் சொல்லும்!

**யாத்ரா (ஒக் - டிச) 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியில்லை

புதிய ஆயுதத்தை
புடம் போட்டுப் பார்ப்பதற்கு
அதி சக்தி வாய்ந்த இடம்
ஆப்கானிஸ்தான் தான்
இதில் என்ன சந்தேகம்?
எக்ஸ்ரே எடுத்துவிட்டார்!
வதிவிடத்தைத்
தாக்கிவிட்டு
விதி என்பார்
புதினமில்லை!
சதி செய்யும் நாடுகளின்
சண்டித்தனங்களுக்கு
கதியாவோர்
பொதுமக்கள்!
பதிவு செய்
மனச்சாட்சி
பாரினில்
நீதியில்லை!

**இடி 03.11.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக் பொயின்ட்

மன்னம்பிட்டி
செக் பொயின்ட்
ஆளையாள்
அடித்துக் கொண்டு
இறங்க ஆயத்தம்

ஒருவர் கூட
இருக்க முடியாதது
தெரிந்த விஷயம் தான்
நிறைந்து வழியும் பஸ்
நிற்கத் தயார்
சுமைகள் தூக்கும்
தடபுடல்.

இறங்க வேண்டாம்
இடி இடித்தால்
போல்
பொலிஸ்காரர் ஒருவர்
சீறி நிற்கின்றார்

முன்னால் ஐந்து
பஸ்கள்
இறங்கிய சனங்கள்
முண்டியடித்து
கியூவரிசையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணுக்கு வேறு கியூ
பெண்ணுக்கு வேறு கியூ
ஆமை வேகத்தில்
அணி நகர்கிறது.

கொளுத்தும் வெயிலால்
கொட்டும் வியர்வை
ஆமி ஒருவர்
இறங்கச் சொல்லி
ஆணையிடுகின்றார்

படியில் நின்றோர்
பாய்ந்து இறங்கி
கியூவை நாடுகின்றார்.

"பஸ்ஸுக்குள் போங்கள்!"
பொலிஸ்காரர் ஒருவர்
பாய்ந்து வருகின்றார்.
இறங்கியோர் மீண்டும்
பஸ்ஸுக்குள்ளே
ஏறி நிற்கின்றார்கள்.

வியர்வை நாற்றம்
நெறிசல் பாரம்
அழும் குழந்தைகள்
அந்தோ பரிதாபம்!

முந்திய கியூவில்
முக்கால் குறைந்தது
பந்தியில் வந்து
படை வீரன்
"பகின்ட" - "பகின்ட"
இறங்கச் சொன்னான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேக்கும் ஆளும்
வேகத்தோடு
இறங்க முனைகின்றார்.
ஓடியே வந்து
வீடியோ பொலிஸ்!

விரைவாய் படம்
பிடிப்பார்.
குழந்தைகூட
வீடியோ படத்தில்
குறிதவறாது.

களிசனுக்குள்ளே
கையை விட்டு
காவலர் பரீட்சிப்பார்
காலில் போடும்
கால் உறையை
கழற்றிச் சோதிப்பார்.

அடையாள அட்டையை
ஒருவர் பார்த்து
ஆளையும் பார்ப்பார்.

காவலர் கண்கள்
காட்டுத் தீதான்
பாவம் பிரயாணி
பயந்து போவான்
கண்ணைக் கண்டதும்
தின்றதும் எரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கிய உடுப்பை
பிரித்துப் போடுவர்
பேனையின் மூடியை
பிரித்துப் பார்ப்பர்

பெண்களைத் தனியே
பெண் காவலர்
பிரித்துப் பார்ப்பார்கள்
மார்புக் கச்சையைப்
படித்துப் பார்ப்பாராம்

ஒரு வயதுப் பிள்ளை
பால் போத்தலினை
குலுக்கிப் பார்ப்பார்கள்!
பாவம்!
குடிக்க மாட்டார்கள்!

சொக்கலட். சுவிங்கம்
பழங்கள் என்றால்
கொஞ்சம் எடுப்பார்கள்
கெஞ்சிக் கொடுத்தால்
மறுத்து விடுவார்கள்

கண்ணாடி வைத்து
பஸ்ஸின் கீழே
குண்டு பார்ப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவி கொண்டு பார்ப்பார்கள்.
குண்டு பிடிக்கும் நாயை
பஸ்ஸில்
கொண்டு செல்வார்கள்.
ஒன்றுமில்லை
என்று சொல்லி
கூட்டி வருவார்கள்.

அலியென்பார்
கொழும்பு வந்தார்.
அடையாள அட்டை
இல்லையாம்
புலியென்றார்கள்
பிடித்து வைத்தார்கள்!

மட்டக்களப்பில் அலி
மன்னம்பிட்டியில் புலி!
விட்டாரோ தெரியாது!
வேதனை!

தமிழ் சோதகர்
என்றால் போதும்
செக்கிங்
தடல்புடலாய் நடக்கும்
செக்கிங் முடிந்தது
செக்கன் 3600
முடிந்து விட்டது!


இரண்டு மணிநேரம்
அநியாயம் என்று
பேசிக் கொள்வார்கள்.
மனசால்
ஏசிக் கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னம்பிட்டியில்
லொறிகள் இருநாள்
கண்ணை
விழித்திருக்கும்!
காவலிலே நிற்கும்!
ஏற்றி இறக்கி
சாமான் எல்லாம்
தரமாய் பரிதவிக்கும்!

இந்தச் சோதனை
என்று முடியும்?
ஆண்டவன்தான் அறிவான்!

**தினகரன் வாரமஞ்சரி**
**17.09.2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி வேண்டும்

மின் அஞ்சலில்
மிகத் துரித சேவை
கண்மூடி திறப்பதற்குள்
கணனியின் செயல்பாடு
இன்னொருவர்
நிலையென்ன?
எண்ண நேரமில்லை!
இனி . . . மனிதன் பிஸி!

* * *

உண்டது சமிபாடா?
உடலுக்குள் நிற்கிறதா?
கண்டறியக் கூட
கணனி இருக்கிறது!
உண்டானா?
உடுத்தானா?
உறங்கினானா?
ஏழை உதட்டை
நனைத்தானா?
உற்றுப்பார்க்க
ஒரு கணனி இங்கு
உருவாக வேண்டும்.

* * *

ஓடும் சாரதி
ஓட்டத்தில் குடித்தானா?
ஊதிப் பார்க்க
பலூன் இருக்கிறது
வாடும் ஏழையின்
வாயில் இருந்து
குடல் வெக்கை
வாசம் வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதிப்பார்க்க இல்லை
உற்றுப் பார்க்க
எந்த பலூன் இருக்கிறது?

* * *

சாரதியின் வேகத்தை
கணனி பதிவு செய்யும்
சாராயத் தடுமாற்றம்
உறுதியாகும் பால்விலை கூடி
பசியில் துடிக்கின்ற
பாலகனின் மூச்சை அளக்க
முழு அளவுக் கணனி
அகிலத்துக்கு
அறிமுகம் தரவேண்டும்!

**நவமணி 20.08.2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையா முரளி

முத்தையா முரளி
சத்தியமாய் - நீ
தமிழ் தாய் மகன்
சாதனை புரிந்த
உத்தமன்
சுழற் பந்து வீசி
கிரிக்கெட் உலகில்
பிரியர்களால்
நேசிக்கும்
தேசத்தின் நாயகன்

சாதனை வீரனை
சமாதானச் சூழலில்
பாதத்தை - யாழில்
பதித்த பந்தாளனே

மூத்தவரும், சிறியவரும்
யாழின் தாய்க்குலமும்
முத்தையா முரளி
உனைக்கண்டு
மெத்தவும் மகிழ்ந்தார்கள்

உன் வீரம்
தொடரட்டும்!
உன் பந்தும்
உருளட்டும்!
முத்தையா நீ
இலங்கையின் சொத்தையா!

**கவிதைப்பூங்கா தினகரன்**
**13.10.2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவாய் கேள்

சதாமையே அழிப்பதற்கு
சதி தீட்டும் அமெரிக்கா . . .
நிதானித்து யோசித்தால் நீதம் ! – அன்றேல்
நிர்மூலம் நீயாக நேரும்!

ஆயுதமே கண்கொண்டு
அமெரிக்கா துள்ளியெழின்
ஓயாத பாலைநில யுத்தம்! – ஈராக்
உறுதியுடன் சண்டையிடும் நித்தம்!

பூண்டோடு அழிக்கவெனப்
புறப்படுவாய்! புஷ்ஷே நீ!
வீணாகப் பேரழிவைக் காண்பாய்! – என்றும்
விபரீதம் உனக்கேதான் ஏற்பாய்!

ஈராக்கியர் நெஞ்சம்
இறையெண்ணம் தனில்தஞ்சம்
ஊரையே அழித்துவிடும் போக்கு– புஷ்ஷே!
உன்கழுத்தில் மட்டுமடா தூக்கு!

இடி 01.07.2002

06 DEC 2021
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அளவு மதிப்பீடு

இனத்துக்குள் சமாதானம்
வேண்டும்
இருட்டறைப் பேச்சுக்கள்
போதும்!
மனதைத் திறந்து பேசும்
மக்கள் நெஞ்சை ஈர்க்கும்
பணத்தை நம்பி வாழும்
பசப்புக்காரர் நாளும்
இனத்தை விற்று வாழும்
இழிவைக் கொண்டார் நம்பு!


நான்கு இனமும் நாளும்
நாட்டில் வாழவேண்டும்
காணும் துவேசம் சாகில்
கனவாய் உலகம் தோணும்
ஏனோ இனத்துச் சண்டை?
என்றும் இணைவோம் மனிதன்
வீணாய் இரத்தம் சிந்தி
விரயம் வாழ்நாள் யோசி!

சமயச் சண்டை உரக்கும்
சாதிச் சண்டை கலக்கும்
இமயம் பாஷைச் சண்டை
இதற்குள் கறுப்பன் வெள்ளை
நமக்குள் நாளும் தொல்லை
நாடு பிடிக்கும் யுத்தம்
அமர்க்களத்தில் உலகம்
ஆழ்ந்தால் நீதி உறங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் உலகில் வெல்லும்!
சமயம் நீதி சொல்லும்
பட்டம் பதவி புகுந்து
பாதி வாழ்வைக் கொல்லும்
திட்டம் இல்லா மனிதன் தினமும்
தவிப்பான் நஷ்டம்
கட்டம் கட்டம் பார்த்து
கனிய வேண்டும் இதயம்!

வீரகேசரி வார வெளியீடு
06.07.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிட்டு வாங்கிய குட்டு!

தேங்காய் போட்ட பிட்டென்றால்
தின்பதற்கு ருசியாகும்!
பாங்காய்த் தேங்காய்ப் பிட்டென்றும்
பிரிக்க முடியா துறவாகும்!
ஓங்கும் தமிழர், முஸ்லிம்கள்
ஒற்றுமைக்கு உதாரணம் தான்!
தீங்காய் யார் தான் குழிபறித்தார்?
தினமும் உறவில் தீக்குளித்தார்!

★❊✝❊★

மாவும் சீனியும் கலந்தது தான்
மணக்கும் நல்ல பனிசாகும்!
சாவும் வாழ்வும் ஒரு வீட்டுச்
சரித்திரத்தின் நிகழ்வாகும்!
தாவும் குரங்கின் மனப்போக்கில்
தமிழர் முஸ்லிம் வாழ்வில்
யாவும் இறைவன் படைப்பென்ற
யதார்த்தம் உணரின் நிம்மதி தான்!

★❊✝❊★

தமிழர் முஸ்லிம் உறவினிலே
தடம் பதிக்கும் நிலைகண்டு
செமிபாடற்ற சாத்தான்கள்
சக்தி போட்டுத் திரிகின்றார்
திமிங்கிலமாய் சுக வாழ்வைத்
தின்று போடப் பார்க்கின்றார்
நிமிடம் தோறும் தமிழ் முஸ்லிம்
நிம்மதிக்காய்ப் பிரார்த்திப்போம்!

வீரகேசரி வார வெளியீடு 03.08.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஸ்! புஷ்! புஸ்!

நீங்கள் அமெரிக்காவுக்கு
மட்டும் ஜனாதிபதியல்ல
சகல உலகின்
சாவு மயானங்களுக்கும்
சர்வாதிகாரி!

எண்ணெய்க்காகத்
தன்னை அர்ப்பணித்த
புண்ணாகிப் போன
புத்திசாலி!

கம்பியூட்டரால்
உலகைப் பிடிக்கும்
வம்பு மாஸ்டர்!

மறு உலகுக்கு
ஆள் சேர்க்கும்
முழு உலக
புரோக்கர்

உங்கள் பந்தாட்டத்துக்கு
பிளேயர் இல்லாததால்
டோன் பிளேயரை
சேர்த்துக் கொண்ட
பூண்டோடு அழிக்கும்
பூதங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கை உலகில்
வேறாக்கிக் காட்ட
கூரான ஆயுதத்தால்
குறிபார்த்த
குள்ள நரி

ஜனநாயகம் செய்ய
ஈராக்கில் புகுந்து
பிண நாற்றம் தந்த
பேய் நீ!

வல்லரசு என்று சொல்லி
ஈராக்கியரை
கள்ளனாக்கிய
வம்பன்

ஆயிரம் வருட
ஈராக்கிய நாகரிகத்தை
மியூசியத்தை உடைத்து
மிலேச்சத்தனம் புரிந்து
வரலாற்றைப் புதைத்து விட்ட
அநாகரிக அரக்கன் நீ

வங்கிளை உடைத்து
வளத்தை வீசி விட்டு
பொங்கி அதை அள்ள
போதித்த ரவுடி நீ

கசிப்புக்காரன்
கடையுடைப்பான்
பைத்தியக்காரன்
ஆஸ்பத்திரி கண்ணாடியை
அடித்து உடைப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட் சூட் போட்ட
நாசகரே! உங்களுக்கும்
இவர்களுக்கும்
வித்தியாசம்
என்ன?

அரபுலக வாய்களுக்கு
பிளாஸ்டர் போட்ட
மாஸ்டர் பிறைன்
நீ இல்லை
உசாமாக்களால்
கண்மூடும் தலைவன்
மண்மூடும் மடையன்

**புஷ்ஷை நினைக்கையில்**
**இரத்தம் கொதிக்கிறது**
**(புரட்சிக் கவிதைகள்)**
**10.10.2003**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கம் நுணுக்கம்!

ஆதாயமில்லையெனில்
அடியெடுத்து வைக்காத
நீதியே தொலைந்த காலம்
நிம்மதி குறைந்த நேரம் !
மாதாவின் மருந்துக்கும்
மகன் வாசி பார்க்கின்ற
ஆகாத கமிஷன் காலம்
அனாதா கோலம் போடும்!
யாரைத்தான் நம்பநேரும்.

பல கூடம் அமைத்தாலும்
பணம் தேடும் முயற்சி தான்
கல்லூரி கட்டிடினும்
காசடிக்கும் நோக்கந்தான்
சொல்லொன்று செயல் வேறு
செய்பவனும் வீரன்தான்
எல்லாமே இன்றுலகில்
எச்சசொச்சம் தேடத்தான்!

**தினகரன் கவிதைப் பூங்கா**
**26.10.2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புப் பெருநாள் வருக!

உலகின் மூலை முடுக்கெல்லாம்
உனக்காக யாஅல்லாஹ்!
பலகோடி முஸ்லீம்கள்
பகல் எல்லாம் பசித்திருந்து
நலமாய் ரமழான் நோன்பிருந்த
நாட்களுக்குப் பரிசு தரும்
அழகின் ஈத் பெருநாளே
அருமை நோன்புத் திருநாளே!

அருமை ரமழான் இரவுகளில்
எழுந்து ஸஹ்ரு செய்யுகையில்
இருட்டில் குண்டை இஸ்ரவேல்
எறிந்து தீயை மூட்டுவதால்
பெருமையான பலஸ்தீனில்
பிரிந்த உயிரை நினைக்கையில்
பெருமை ரமழான் பெருநாளே
பாரில் வந்தாய் வரவேற்கிறோம்!


தூய நகராம் ஈராக்கில்
தீயோர் வைத்து குளிர்காயும்
தீய நெருப்பு ஜுவாலையிலே
தினமும் மடியும் முஸ்லீம்கள்
வாயில் நோன்பின் நிய்யத்தை
வைத்து உயிரைத் துறக்கையிலே
தூய ரமழான் பெருநாளே
துயர் துடைக்க வந்திடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பெண்கள் பிரான்சில்
முகத்தை மூட தலைமறைக்க
இஸ்லாத்துணர்வை எடுத்தோத
இன்று வந்த தடைகளுக்கு
விசுவாசத்தின் தோழியெல்லாம்
வேதனையால் அழும் போது
பசுமை ரமழான் பெருநாளே
பாரில் வந்தாய் வரவேற்றோம்!

ஆப்கானிஸ்தான் வரலாற்றின்
ஆணித் தரமாம் தக்வாவை
ஆப்பிழுத்த குரங்குகள்
அதுவே பட்டு மாய்வதுபோல்
வாப்பா இல்லாப் பிள்ளைகளாய்
வாடும் ஷரீயத் கோலத்தைக்
காப்பாய் ரமழான் பெருநாளே!
கண்ணீர் போக்க வருவாயே!

**தினகரன் வாரமஞ்சரி**
**2004ம் வருடம் நவம்பர் மாதம் 14ம்**
**திகதி ஞாயிற்றுக்கிழமை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்கா கோலாவா?

அக்கா! அக்கா!
கொக்கா! கொக்கா!
சீ, கக்கா! கக்கா!

❋ ❋ ❋

கொக்கா கோலா
இஸ்ரேலின் தயாரிப்பு
முஸ்லிம்களை அழிக்கும்
மூல – கெமிக்கலது
அதனால் .. ..
அக்கா! அக்கா!
கொக்கா! கொக்கா!
சீ, கக்கா! கக்கா!

❋ ❋ ❋


பாத்றூமின் துருவை
அகற்ற வழியின்றேல் . . .
கொக்கா கோலாவை
இரவில் ஊற்றி
பாத்றூமை தேய்த்து வை!
விடியலில் ஊத்தையே
இருக்காது; குறித்துவை!
அந்தக் கெமிக்கலைத்தான்
நாங்கள் குடிக்கின்றோம்!
அதனால் . . . அக்கா! அக்கா!
கொக்கா! கொக்கா!
சீ, கக்கா! கக்கா!

❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலின் செல்களுக்கு
இலட்சனை கொக்கா
கோலாதான்
ஆயுதத்துக்கும் ஆட்களை
அழிப்பதற்கும்
கலிமாக்காரர்களை
காலிபண்ணுவதற்கும்
உழைத்துக் கொடுக்கும்
உயிர் கொல்லிப்பானம்
கொக்கா கோலா தான்
அதனால் அக்கா! அக்கா!
கொக்கா! கொக்கா!
சீ, கக்கா! கக்கா!

11.08.2003




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமைப் பெருநாள்

மனித தியாகத்தை வலியுறுத்தி
மாண்பு பெறச் செய்கின்ற பெருநாள்!
இனத்துக்குள் சச்சரவை நீக்கி
இணைந்து வாழ் என்கின்ற பெருநாள்!
கணப்பொழுதும் இறை நினைவை மறவா
கஃபா முன் இறைஞ்சுகின்ற பெருநாள்!
சனங்களுக்குள் ஒற்றுமை வேண்டும்
சாற்றி நிற்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாள்!

❁❁❁

இரத்தமெனும் மையாலே இலங்கைப்படம்
இனி வரையக் கூடாது என்று சொல்லி
உரத்த குரலினிலே அரபா மண்ணில்
ஒவ்வொரு ஹாஜிகளும் பிரார்த்திப்பார்கள்
வருகின்ற வழியெல்லாம் மக்கா மண்ணில்
வல்லவனே! இலங்கையில் சமாதானத்தை
தரவேண்டும் என கேட்கும் தகுதியான
தருணமே இன்றைய ஹஜ்ஜுப் பெருநாள்!

❁❁❁

தமிழ் - முஸ்லிம் உறவினிலே விரிசல் வேண்டாம்
தாய் பெற்ற பிள்ளைகளாய் வாழ வேண்டும்
உமிழ் நீர் சுரப்பது போல் - மனித நேயம்
ஒவ்வொருவர் உள்ளமும் சுரக்க வேண்டும்
தமிழர் - முஸ்லிம் - சிங்களவர் என்று சொல்லி
தாய் மண்ணில் போராடாதிருக்க வேண்டும்
சமுதாய எண்ணத்தை மனதில் பதித்து
சாந்தம் செய்யும் நன் நாளே ஹஜ் பெருநாள்!

சுடர்ஒளி 11.01.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சலோ கரைச்சல்

ஆசியாவில் அலைக் கரைச்சல்!
திருமலையில் சிலைக் கரைச்சல்!
கொழும்பில் கொலைக் கரைச்சல்!
பெற்றோல் விலைக் கரைச்சல்!
ஈராக்கில் தலை[மை] கரைச்சல்!
பீதியினால் கலைக் கரைச்சல்!
மீனவர்க்கு வலைக் கரைச்சல்!
மண் சரியும் மலைக் கரைச்சல்!

▲ ▲ ▲ ▲

மதங்களுக்குள் பிழைக் கரைச்சல்!
தெருவெல்லாம் இலைக் கரைச்சல்!
சொப்பிங்பேக் நிலைக் கரைச்சல்!
இயக்கத்தில் கிளைக் கரைச்சல்!
துப்பாக்கித் துளைக் கரைச்சல்!
கலகத்தார் நுழை[வு]க் கரைச்சல்!
ஆகாயத்தில் அனல் உலைக்கரைச்சல்!
தொலைபேசி பணத்தை
தொலை கரைச்சல்!

▲ ▲ ▲ ▲

அறக் கொட்டியான்
விளைவில் கரைச்சல்!
இறந்துவிட்டால்
கொலையில் கரைச்சல்!
பொலிஸாரின் வளை[வு] கரைச்சல்!
தொலைக்காட்சி கலையில் கரைச்சல்!
அரிசி விலை கூடி உலை கரைச்சல்!
வீட்டில் படுக்காதே உழை! கரைச்சல்!
வெள்ளம் வீட்டுக்குள் மழை கரைச்சல்!
முறையில்லா விறல் மரம்
முளை[க்க] கரைச்சல்!

வீரகேசரி வாரமலர் 03.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாதோன் மலிந்த இலங்கை!

கொள்ளையடித்தால் இனந்தெரியாதோன்
கொலை செய்தாலும் இனந்தெரியாதோன்
கள்ளக் கடத்தல் இனந்தெரியாதோன்
காடைத் தனம் தான் இனந்தெரியாதோன்
பொல்லால் அடிவிழும் இனந்தெரியாதோன்
புரட்டல் செய்வான் இனந்தெரியாதோன்
பிள்ளை கடத்துவான் இனந்தெரியாதோன்
பீதி தருவான் இனந்தெரியாதோன்

☹☹☹☹☹

குண்டு வெடிக்கும் இனந்தெரியாதோன்
குத்திச் செல்வான் இனந்தெரியாதோன்
மண்டை கிடக்கும் இனந்தெரியாதோன்
மரித்துக் கிடப்பான் இனந்தெரியாதோன்
சண்டை நடக்கும் இனந்தெரியாதோன்
சுடுதியாய் சுற்றுவார் இனந்தெரியாதோன்
துன்பம் தருவார் இனந்தெரியாதோன்
நம்பர் அற்ற வாகனம் இனந்தெரியாதோன்

☹☹☹☹☹

நீதி மன்றில் சூடு இனந்தெரியாதோன்
நின்றவன் விழுவான் இனந்தெரியாதோன்
வீதியில் பாலியல் இனந்தெரியாதோன்
பெண் நிர்வாணம்! இனந்தெரியாதோன்
சாதிச் சண்டை இனந்தெரியாதோன்
சமாதானம் பேசுவார் இனந்தெரியாதோன்
வீதியில் சாவு இனந்தெரியாதோன்
விளக்க மறியலில் இனந்தெரியாதோன்

☹☹☹☹☹

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தில் சாகுவார் இனந்தெரியாதோன்
விபத்தில் மரணம் இனந்தெரியாதோன்
புத்தகம் தீக்கிரை இனந்தெரியாதோன்
பக்தியாய் இருப்பான் இனந்தெரியாதோன்
சத்தியம் பண்ணுவார் இனந்தெரியாதோன்
சதிக்குத் தூண்டுவான் இனந்தெரியாதோன்
உத்தமன் இருக்கிறான் இனந்தெரியாதோன்
உலுத்தனும் இருக்கிறான் இனந்தெரியாதோன்!

29.05.2005 வீரகேசரி வாரமஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் இனப்பிரச்சினை

காலைப் பதித்திட காத்திரமானதோர்
கலைகள் நிறைந்திட்ட பூமி!
யாழ் மண்ணின் சீரை யாம் மறக்காமல்
யதார்த்தமாய் இரு இனம் ஒன்றாய்
வாழ்கின்ற காலை வழிமறித் தெம்மை
வட்டமாய்க் கூட்டிச் சொன்னார்
நாலாறு மணிக்குள்ளே யாழ் விட்டு முஸ்லிம்கள்
நகர்ந்திட வேண்டுமென்றுரைத்தார்!

பொட்டலம் கட்டினார் பிள்ளையைத் தூக்கினார்
போத்தலில் பால் ஊற்றி எடுத்தார்
கட்டிய தாலியும், கை வந்த காசையும்
கால் நடைப் பயணத்தில் எடுத்தார்
தட்டினார் அத்தனை தனத்தையும் சொட்டினார்
தாலாட்டுப் பிள்ளையின் பால் மட்டும் தந்தார்
நாட்டிய பனைமரம் அழுதிட முஸ்லிம்கள்
நடையிலே காட்டினைக் கடந்தார்

கண்ணாலே பார்த்திடக் கதை சொல்லும் ஊரு
கடல் ஓடி முஸ்லீம்கள் வந்த நல்லூரு
மன்னாரை என்றும் மறக்க முடியுமா?
மனதினில் அதனை மாற்றவும் முடியுமா?
சொன்னாரே அவ்வூரை விட்டுப் போ என்று
சோகமாய் கிழக்கிலும் இதே நாளன்று
புண்ணான மனசுடன் பொட்டலம் கட்டி
புரியாமல் முஸ்லீம்கள் புறப்பட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை விட்டதால் விம்மியழவில்லை!
விளைச்சலை விட்டதும் வேதனையில்லை!
நீட்டிய மினாராவில் காட்டிடும் கூன்பிறை
நிறைவான மஸ்ஜிதை இழந்ததனாலே
வாட்டிய சோகம் வாயினால் சொல்ல
வார்த்தைகள் இன்றி வந்த இடங்களில்
காட்டிடும் அகதி முகாம்களிலிருந்து
கண்ணீராய்க் கொட்டி கவலையில் துயன்றார்!

முஸ்லிம் சமூகத்தின் முதுகெழும்பான
முறையான கல்விக் கூடங்கள் போனது
அஸ்லியா, தஸ்லிமா, முஸ்லிமா, முர்ஸிதா
அஹ்மதும் அழுதிட கலாசாலை இழந்தார்
உஷ்! என்று வாய் பொத்தி ஊமையாய் ஆனார்
உணர்வினை இழந்து சோர்வாகிப் போனார்
கஷ்டமுடன் பிஸ்மில்லாஹ் அகதிமுகாம் கண்டார்
காரூன்ய இறைவனே! ஊர் அனுப்பு என்றார்

கூட்டாங்கள் எத்தனை போட்டனர் கூடினர்
கூழ் கஞ்சிப் பானையில் ஓட்டையாய்க் கண்டனர்
நாட்டில் நலிவுற்ற முஸ்லிம்கள் நிலை காண
நாட்களில் ஒரு நாள் "ஒல்ரா ஒட்டுண்ணி"
கூட்டிடக் கதைத்திட "எரிக் சொல்ஹெய்ம்"
குயிலாகப் பறக்கிறார் " யசூசி அகாசி"
நாட்டுக்குள் வருகிறார் அமேரிக்க சார்பாய்
நலமுடன் "கிருஷ்டினா ரொக்காவும்" வருகிறார்

அருமையாய் வாழ்ந்து துரும்பாகிப் போன
அகதியுற்ற முஸ்லிம்கள் நிலை காண
"நிரூபமா ராவும்" இந்தியா சார்பில்
நிதானித்துப் பேசிட ஐக்கிய நாட்டின்
சிறப்புரு செயலர் கோப்பி அண்ணானும்
சிந்திக்கச் சிந்திக்க நடந்தது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமுறை வாழ்ந்த இடங்களில் வாழ
மனமொத்து வாழும் நிலை வந்தால் போதும்

மழைபெய்தாலும் யாழ்ப்பாணம் மன்னாரான்
மதியம் சுட்டாலும் மட்டக்களப்பான், மன்னாரான்
குழைந்த சோற்றுக்கும் யாழ்ப்பாணம் மன்னாரான்
குத்திக் காட்டாத ஊர் எது சொல்லுங்கள்
நலிவுற எழும்பிய மட்டு நகர் முஸ்லிம்கள்
நாகச, பிறர் ஏச நாளும் பொறுக்கின்றார்
பிழையான மக்களென்றும் அகதிகளைப் பேசுகின்றார்
பிடரி நரம்புடைந்து பிணம் போன்று வாழ்கின்றோம்!

மீள்குடியேற்றத்தை மேதினில் பேசுங்கள்
மீழாத் துயரத்தை மாற்றி அமையுங்கள்
தாழ்வு மனப் போக்குகளை பேறினங்கள் மறந்திடனும்
தயவாக முஸ்லீம்கள் நிலை காணத் துடித்திடனும்
கால் கொஞ்சம் அரசியல் கெஞ்சுதலை விட்டிடனும்
காலமெல்லாம் அரசியல் அநாதைகள்ள முஸ்லிம்கள்
கீழான இழிநிலையை கிழித்தெறிந்திடுங்கள்
கிருபையுடன் தலைவர் பிரபா பழி அகற்றிப் பேசிடுங்கள்!
தமிழ் மக்கள் எந்நாளும் நல்லவர்கள் என்றேதான்
தயங்காமல் மன்னாரில் முஸ்லீம்கள் வாழ்கின்றார்
தமிழ் மக்கள் அவசரத்தில் துர்த்திட்ட போதினிலும்
தனிவார்கள் என யாழில் முஸ்லீம்கள் வாழ்கின்றார்
அமிழ்தமுறும் தமிழ் பேசும் நல்லவர்கள் ஒரு நாளில்
அணைப்பார்கள் எனமட்டு நகரினிலே வாழ்கின்றார்
சமுதாயம் வேண்டுமென பழையதினை மறந்து விட்டு
சாத்தமாய் திருகோணமலையினிலே வாழ்கின்றார்


சமாதானம் தோண்றாது என நினைத்த முஸ்லீம்கள்
சத்தியமாய் தமிழருக்கு பூமியினை விற்றுவிட்டார்
சமாதானம் தமிழரினால் தோன்றுமென நம்பியவர்
சத்தான நிலங்களினை முத்தாக வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமானும் அர்ச்சுணனும் கைகோத்து வாழுதற்கு
ஆண்டவனே! பிரபாவை, ஆட்சி கொள்ளும் நல்லவரை
சீமான்ய உள்ளமதாய் மாற்றிடனும் பேரினத்தோர்
சிந்தித்து கைகோக்க வழி திறந்து விட வேண்டும்

எம்பிகளே இந்நாட்டின் தங்கக் கம்பிகளே!
இமயமெனும் ஜனாதிபதி, பிரதமர், மந்திரிமார்
தம் வசம் ஆட்சியற்ற எதிர்க்கட்சி உறுப்பினரே
தம், தம் கட்சிகளில் தங்கியுள்ள நல்லவரே
பம்பரமாய் சுழலுகின்ற முஸ்லீம்கள் காலூன்ற
பிறந்த ஊர்களிலே நிரந்தரமாய் குடியமர
மும்முரமாய் பிரபாவின் முடிவுடனே யோசித்து
முஸ்லிம்கள் அகதிநிலை முகம் மூட தீர்வெடுங்கள்!

**அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற கவிதை**
**தேசிய மீலாதுன் நபி விழா - வன்னி 2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவயுக நடப்புக்கள்

பூவைப் பார்த்து
புன்னகைக்கச்
சொன்னேன்
இயலாது என
மறுத்தது
அர்த்தம்
கேட்டேன்
அகதிமுகாம்களைப்
பார்த்து
சிரித்தவர்களால்
ஆத்திரமடைந்து
நான் சிரிப்பை
இழந்து விட்டேன்
என்றது!

◎❍◎

வெள்ளைக் கம்பில்
வருபவரைப்
பார்த்து
விழிமட்டும் தான்
பிரச்சினை என
எண்ணினேன்
அவரோ - தனது
வாழ்வு கூடாரமில்லாத
அகதிமுகாம்
என்றார்!

◎❍◎

பச்சைப் பசேல்
என்ற பூமி
புற்களினால்
சிரிக்கிறது!
அந்தப் பூமி
மட்டும்
விசித்திரமா? இல்லை
உள்ளே
உரமாகிப் போன
மனித - தசைகளின்
சிவப்புச் சாயங்களால்தான்!

◎❍◎

புலம் பெயர்ந்த
பேரப்பிள்ளைகளிடம்
ஒரு தமிழ் வார்த்தை
வாயில் வருமென
எண்ணிய தாய்க்கு
மண்ணில் கிடைத்த
மாபெரும் பரிசு
மரணம் தான்

◎❍◎

பேரூந்தில்
பிச்சைக்காரர்கள்
கை நீட்ட
மாட்டார்கள்
என்பது சந்தோஷச்
செய்தி!
ஆனால் . . .
பேரூந்து நடாத்துனர்
மிச்சம் தராமல்
பெரிய தாள்களுக்கல்லவா
கையேந்துகிறார்.

◎❍◎

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்க உதவிய
சத்தியல்
ஆணியைக்
கழட்டியது போல். . .
ஏற வைத்த
ஏணி தான்
அவனை
இறக்கியும்
விட்டது! இது
பதவிப் போட்டியின்
முடிவாக. . .
◎❍◎
பிறரின்
எழுத்துக்களை
வாசிக்காதவன்
எழுத்தாளன்
எனப்
பெயர் எடுத்தான்
கருவூலம்
இல்லாமல்
காலத்தால்
விடைபெற்றான்!
இது - எழுத்துலகில்
ஒரு வங்குரோத்துப்
பென்ஷன்!
◎❍◎
தமிழை உயிர்
வாழவைக்கும்
தமிழ் பேசும் மக்கள்
ஆங்கிலத்திலும்
பிரெஞ்சிலும்
கன்னடத்திலும்
அன்றாட வாழ்வுக்கு
அகப்பை பிடிக்கின்றார்கள்.

ஆனால் . . . தமிழ் வாழும்
புலம் பெயர்ந்து
தமிழுக்கு பூச்சுடுபவர்களால். . .
தமிழைத்
தாய் நாடுகளில்
வாழவைப்பவர்களால்!
◎❍◎
வங்கியில் இட்ட
பணத்துக்கும்
நம்பிக்கையில்லையாம்
இத்துணை
இதயங்களையும்
யுத்தத்தில் - இழந்து
இன்று வாழுகின்றானே
அவனுக்கு இருப்பது - ஒரே
ஒரு நம்பிக்கை தான்
அது தான் தன் நம்பிக்கை!
◎❍◎
சுனாமியால்
பாதிப்புற்றவன்
இன்று வரை
வீடு ஒன்று
இல்லாமல்
ஏங்குவதால் தான்
இன்னுமொரு
சுனாமிக்கு
விண்ணப்பிக்கின்றான்
"அலைகள் சங்கமம்"
படத்துக்கு அது
வழி வகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவேஷத்தைத்
தூர வைத்து விட்டு
மனசுடன்
மனசு இணைந்து
இதய சுத்தியுடன்
இயங்குகின்ற
ஒன்று தான்
இலக்கியம் - அதிலும்
சிலர் தலைக்கனம்!

எங்கள் கலாச்சாரத்தில்
உத்தமத் - தாய்மார்கள் உடம்பில்
இன்ன இன்ன இடங்களில்
ஆடையை சுற்றியிருந்தார்கள்
என்று பச்சை குத்துபவர்களுக்கு
பள்ளிக்கூடம்
நடாத்தும் காலம்
நாளை வரத்தான்
போகிறது!

◎❍◎



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப் பெருநாள்!

ஒற்றுமையைக் கொள்ளடா
உயர் ரமழான் பேசடா
வேற்றுமையைக் களையடா
விஷேட பெருநாள் பாரடா!
தமிழ் - முஸ்லிம் சேர்ந்தடா
தலை நிமிர்ந்த நாடடா
எமது நாட்டைப் பேணடா
இன்று பெருநாள் பாரடா!

மூவினத்தோர் இணைந்தடா
முறையாய் வாழும் போக்கடா
சீவியத்தில் சிறப்படா
சிந்தி! பெருநாள் பாரடா!
ஆயுதத்தால் நாமடா
அமைதியிழந்தோம் கேளடா
பேயுத்தப் போக்கடா
பீதிதானே நோக்கடா!

கந்தன், கமால், கஜுஜயா
கைகொடுப்போம் தீர்வடா
வெந்த புண்ணில் நோவடா
வேண்டாம் யுத்தம் நில்லடா!
புரிந்துணர்ந்து றமழானில்
புத்தி பெற்ற வாழ்வடா
மற்ற நாளில் கொள்ளடா
மனிதம் வாழும்; மெய்யடா!

**தினக்குரல் 24.10.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரைப் பார்ப்போமா?

பூமி அதிருமென
எதிர்வுகூறி
புறப்பட்டு
வந்தவர்களல்ல
வடபுலமக்கள்!

♥ ♥ ♥

எரிமலை
வெடிக்குமென
புகை கண்டு
உடனே
பொருட்களோடு
வந்தவர்களல்ல
வடபுலமக்கள்!

♥ ♥ ♥

சூறாவளி
சுழிகொண்டு
விட்டதென
ஊரோடு
எழும்பியோரல்ல
வடபுல மக்கள்

♥ ♥ ♥

மண்சரிவு
வருமென்று
மரணப்பயம் கொண்டு
முண்டியடித்து
வந்தவர்களல்ல
முஸ்லிம்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம் ஊருக்குள்
விரைந்து வருமென்று
உள்ளதைச் சுருட்டிக் கொண்டு
வந்தவர்களல்ல
யாழ் - மன்னார் முஸ்லிம்கள்!

இரண்டு மணித்தியாலத்துக்குள்
விடுதலைப் புலிகளால்
விரட்டப்பட்டவர்கள்
வடபுல முஸ்லிம்கள்!

பதினாறு வருடமாய்
பனைமரத்து ஊருக்குள்
உதயம் காணாமல்
இதயம் வெடிக்கும்
நிலை மாறுமா?
மீண்டும் அங்கு செல்ல
நேருமா?
ஊரைப் பார்ப்போமா?

**வடபுல முஸ்லிம்கள் புலிகளினால்**
**விரட்டியடிக்கப்பட்டு**
**16 வருடங்கள்**
**(கறுப்பு அக்டோபர் - Black October)**
**நெஞ்சத்தின் வடு!**

**நவமணி 29.10.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாம் ஒரு வீரன்

சதாம் ஹுஸைன்
சாத்தானின்
பரம்பரையல்ல:
நிதானித்து
ஈராக்கை
வழிநடாத்திய வீரன்!

இரும்பு மனிதனாய்
ஈராக்கை ஆட்சி செய்த
சதாமை
எலும்பு மனிதனாய்
ஆக்கவே - புஷ்
கனவு கண்டார்.
கடைசி வரை
கம்பீரம் தளரவில்லை
சதாம்! தூ ! தூக்குக்கயிறு!

எண்ணைக்களவுக்கு
சதாம்
உன்னை அழித்திட
எண்ணம் கொண்டது
வெள்ளை மாளிகை!
உண்மையில்
வெள்ளை மாளிகையின்
உள் நிறம் சிகப்பு!
இதை முஸ்லிம்கள்
அறியாதது தப்பு!

06 DEC 2021
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை அழித்து
நரகமாக்கி
சதாமுக்கு மாட்டிய
தூக்குக் கயிறு!
புஷ் ஆதரவாளர்கள்
தங்களுக்கே
மாட்டிக் கொண்ட
மரணக்கயிறு!
மாத்திரமல்ல
மறியல் கயிறு!

ஐஐஐ

யகூதிய ரசனையில்
தீர்ப்பு வழங்கிய
ஈராக்கியர்களே
ஹஜ் பெருநாள்
விடியலை
கறுப்பாக்கி விட்டீர்கள்

ஐஐஐ

கொலைக்கும் சிலைக்கும்
சதாமை விசாரியுங்கள்
நியாயம்!
ஆனால் . . .
யகூதிய அவசரத்துக்கு
தீர்ப்புக் கொடுத்தீர்கள்

ஐஐஐ

தீர்த்தும் விட்டீர்கள்
மூடி நடித்த
இந்த நாடகம்
முஸ்லிம் உலகில்
முகம் கிழிக்கப்பட்டது

ஐஐஐ

06 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாம் ஈராக்கின்
இதயம் மட்டுமல்ல
உலகையே
உலுக்கிய
உதயம்!
முஸ்லிம் சமூகத்தை
மூட்டி வைத்த
தலைவர்களே!
அஸ்தமனமாகிப் போன
சதாம் எனும் சூரியன்
அடுத்த — உலகில்
நீதிக்காக வாதாடுவார்
காரணம் அவர்
சுவனவாதி!

**நவமணி 07.01.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்மத்தின் கண்ணீர்!

வான்பிறையே!
நீ ஏன்
வளைந்து
நிற்கின்றாய்?
அழகுக்காகவா?
அல்லது . . .
அகிலத்தில்
முஸ்லிம்கள்
அல்லல்படுவதைக்
கண்டு
ஆத்திரம்
கொண்டதனாலா?

☪ ☪ ☪

மேகமே!
வான்முகட்டில்
முக்காடு போட்டு
நேராக குவிய
முடியுமே?
ஏன் நீ ஓடுகிறாய்?
காற்று கலைப்பதினாலா?
இஸ்லாமிய உலகை
ஏகாதிபத்துவம்
ஏப்பமிட்டு
துயரப்படுத்துவது
கண்டா - நீ
தூரே ஓடுகின்றாய்?

☪ ☪ ☪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் நட்சத்திரங்களே!
எரிந்து விழுகின்ற
அளவுக்கு
உங்களுக்கு என்ன
நேர்ந்தது?
கலிமாச் சொன்ன
முஸ்லிம்கள்
கால்விளங்கு
மாட்டப்பட்டு
விசாரணைக்கூட்டில்
விபச்சார அடிமையாய்
நிற்பது கண்டா
நீல வானில் நிற்காது
விழுகின்றது?

☪ ☪ ☪

ஈராக்கினுள்ளே
அமெரிக்காவின் இரத்த
வங்கி - அதை
இன்னொரு
நாட்டுக்கு
கைமாற்ற
எண்ணமா?
சீறிப்பாய்கிறது
ஈரான் மீது
பூரானாய் குத்தும்
முனாபிகூன் நாடுகள்
துப்பாக்கித் துப்பலுக்கு
தூர நாளுண்டா?
அப்பாவி முஸ்லிம்கள்
பாவம்

**11.11.2007 நவமணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஷுஹதாக்களின் இனிய நாள்!

காத்தான்குடி
முஸ்லிம்களால்
மாத்திரம்
முகாமிடப்பட்ட
நகரம்!

காத்தான்குடியார்
மூத்த குடிமக்கள்
சேர்ந்து வாழும்
சிறப்புப் பண்புடையோர்
பிட்டும், தேங்காய்ப்
பூவுமாய்
விட்டுப் பிரியாது
தமிழ் மக்களுடன்
ஒட்டி உறவாடிய
உத்தமர்கள்

எங்கள் ஊரில்
எல்லாத் தொழில்களிலும்
சங்கை கொடுத்து
தமிழர்களுக்கு
சன்மானம்
கொடுத்தவர்கள்

இந்த நிலையில் . .
காத்தான்குடி மக்கள்
விடுதலைப் புலிகளுக்கு
என்ன கொடுமை
செய்தார்கள்?

இரவோடு இரவாக
எங்கள் ஊரின்
எல்லாக் கடைகளையும்
கொள்ளையடித்து
கொடுந்தீயால்
எரித்தீர்கள்!
அல்லோல கல்லோலம்

பொருளாதாரம் பூஜியம்!
அப்போதும் கூட
காத்தான்குடி மக்கள்
அமைதி காத்தார்கள்

மாலைப் பொழுதில்
மஸ்ஜிதுக்குள் நுழைந்து
இஷா தொழுத
மானுடத்தை
குறிவைத்துக்
கொன்றீர்கள்

உங்கள் துப்பாக்கித்
துப்பலினால்
எங்கள் ஊர்
இருட்டாகிப் போனது!

தொழ வந்தவர்கள்
துடி துடித்து
அழுத கண்ணுடன்
அடுத்த கணமே
மையித்தாய் போனார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு நாங்கள்
தந்த உறவுக்கு
எங்களுக்கு நீங்கள்
செய்த கைமாறு
இதுதானா . . .?

இறை இல்லத்தில்
தோய்ந்த
இரத்த வெள்ளம்
மஸ்ஜிதில் தொங்கிய
மனித இறைச்சி!
அப்பாவிக் குடிமக்கள்
ஆலிம்கள், மனனமிட்ட
ஹாபீழ்கள்
படித்தவர்கள், பட்டதாரிகள்
இத்தனை பேரையும்
மையத்தாகல்லவா
பதைபதைக்கக் கொன்றீர்கள்!

உங்கள் எஸ்.எம். ஜிகள்
இவர்களைத் தான்
சல்லடையாக்கியது
இதைத் தவிர நீங்கள்
சாதித்தது என்ன?

தாய்க்குப் பிள்ளையில்லை
மனைவிக்கு
கணவன் இல்லை
அக்காவுக்கு தம்பியில்லை
இந்த இலட்சணத்தைத்தான்
எங்களுக்கு தந்தீர்கள்!

வாப்பாவைக் கேட்ட
பிள்ளைகளுக்கு - பதிலுக்கு
வார்த்தையின்றி
வாயடைத்துப் போனோம்
அப்போதைய
குழந்தைகள் அவர்கள்!
வாப்பாவை புலிகள் தான்
கொன்றார்கள் என்பது
இப்போது தெரியும்!
ஆனாலும் . . அவர்கள்
உங்களுக்கெதிராக
ஆயுதம் ஏந்தவில்லை
அப்பாவியாக
ஆண்டவனிடமே
பிரார்த்திக்கின்றனர்!

கல்முனைக்குப்
போகும் வழியில்
காத்தான்குடியாரை
வழிமறித்துக்
கொன்றீர்கள்
நூற்றுக் கணக்கில்!
எங்கள் மானுடர்
நொடியிலே புதையுண்டார்
மையித்தைக் கூட தர -
மறுத்துவிட்டீர்களே!

உங்கள் இரத்த வெறி
ஓயவே இல்லையா?
ஏறாவூரின் எழில்
கொஞ்சும் கிராமத்தை
வெட்டி அரிந்து
இரத்த ஆற்றில்
முஸ்லிம் மையத்துக்களை
ஊறவைத்தீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்துவில்லுக்குள்
புகுந்து புறப்பட்டு
முஸ்லிம்கள்
செத்துமடிய
சிகரம் வைத்தீர்கள்


மூதூருக்குள் சென்று
முகாமிட்டு ஒளிந்தீர்கள்!
பூதாகரமாக்கி மூதூரை
புறப்பட வைத்தீர்கள்
முக்காடிட்ட தாய்மாரை
அகதி முகாம்களில்
முடக்கி வைத்தீர்கள்
மூதூரில் முஸ்லிம்
இளைஞர்களை
கட்டி வைத்து
சுட்டே தீர்த்தீர்கள்!

மீரா ஜும்ஆப்
பள்ளியையும்
ஹுஸைனியா
பள்ளியையும்
ஆறாத மனஉடைவால்
நீங்கள் சுட்ட
தடயங்களை
பூராவும் பூசாமல்
பொத்தல்களாய்
வைத்துள்ளோம்!

உலக இஸ்லாமியர்களே!
நமக்குள் வாழும்
நல்ல மனசு கொண்ட
தமிழர்களே!
உள்ளத்தைக் கைக்கெடுத்து
ஒருமுறை வந்து பாருங்கள்!

அரக்கத் தனத்தால்
அவர்கள் கொன்றார்கள்
அந்த அடக்கத்தலங்களை
வந்து பாருங்கள்
பாசிசப் புலிகளால்
இறந்து போன
இஸ்லாமிய மாணுடர்கள்
அனைவரும்
சுவனப் பூங்காவில்
ஷுஹதாக்களாக வாழட்டும்

**29.07.2007**
**நவமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை தா பெருநாளே!

வெலிகம பள்ளிக்குள்
விசர்நாய் புகுந்து
பழிவாங்கியது துவேஷம்
பதிவாகியது தடயம்
பழிவாங்கி முஸ்லிம்களைப்
புளியாணம் காய்ச்சுகின்ற
இழிவான செயல் ஒழிய
இன்றே வழி செய் பெருநாளே!

காணிகளைப் பூமிகளைக்
கைவிட்டு முஸ்லிம்கள்
கூனிக் குறுகிக்
குட்டுப் படுகின்ற
ஈனச் செயல்கள்
எங்கும் ஒழிந்து விட
மாண்புறும் ஈத் பெருநாள்
மலரட்டும் வாழ்த்துக்கள்!

முகத்தை மூடிவிடும்
முஸ்லிம் பெண்களின்
அகத்தைப் பிழிந்து
அச்சுறுத்தும் சமூகத்தில்
அகதியாய் முடங்கி
அனுபவிக்கும் துன்பத்தை
புகழ் ரமழான் மாற்றிடட்டும்
பூக்கட்டும் ஈத்பெருநாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபுலத்து மக்களெல்லாம்
வந்தது போல் மீண்டும்
வடபுலம் திரும்பி விட
வழிசொல் பெருநாளே!
இடம்பெயர்ந்தோர் பெயராலே
இருட்டில் சுகம் காண்போர்
நடவடிக்கை மாறிடனும்
நலம் சொல் பெருநாளே!

பலஸ்தீன், ஈராக்
லெபனான் ஆப்கானில்
குழந்தை, பெரியவர்
கொல்லப்படுகின்றனர்
கலிமாச் சொன்னவர்க்கு
காலமும் கண்ணீரா?
விழித்தெழுங்கள்
விடை தா பெருநாளே!

**நவமணி 01.10.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி கொள்ளும் இன்ப நாள்

மாண்புடனே ரமழானில் நோன்பிருந்த
மாந்தர்கள் பயன் காணும் பெருநாள் இன்று
கூன் பிறையின் வரவாலே முஸ்லிம் மக்கள்
கூட்டாகப் பெருநாளைத் தொழுவோம் நன்று
வானோர்கள் வையகத்தில் வந்தமாதம்
வல்லவனை அடியார்கள் தொழுத மாதம்
நோன்பிருந்த நாட்களுக்கு அல்லாஹ் தந்த
நோன்புப் பெருநாள் மகிழ்ச்சி கொள்வோம்

புத்தளத்தில் அகதிகளாய் வாழுகின்ற
புலம் பெயர்ந்த யாழ், மன்னார் மக்களுக்கு
சத்தியமாய் ஊருக்குச் செல்வதற்கு
சாந்த வழி செய்திடுவாய் நோன்புப் பெருநாள்
வித்திகர்கள் பேசுவதில் வேலையில்லை
வேரறுந்த முஸ்லிம்கள் வாழ்வு ஓங்க
அத்தரையில் முஸ்லிம்கள் சுஜூது செய்ய
அருமையுள்ள பெருநாளில் ஆலோசிப்போம்!

பலஸ்தீன் மக்களது உடல் உறுப்பு
பக்குவமாய் உடல் கிழித்து எடுக்கப்பட்டு
களவாக இஸ்ரவேல் மக்களுக்கு
கழுதினில் பொருத்துகின்ற நாசச் செயலை
வளமான ரமழானில் பெருநாள் தினத்தில்
வன்மையாய் கண்டிப்போம் துஆவும்
செய்வோம்
அழகான பலஸ்தீன் மக்கள் வாழ்வை
அநியாயம் நிகழாமல் காப்பாய் ரப்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானில் மக்களது அவலக்குரலை
அமெரிக்கா பொழிகின்ற குண்டு மழையை
பூப்போன்று பூத்திருந்து பார்க்கின்ற
பூதலத்தில் அரேபிய சமூகம் சேர்ந்து
தீப்பொறியாய் மனம் மாறி தீர்வெடுத்தால்
தீர்ந்துவிடும் பிரச்சினைகள்; உண்மை! உண்மை!!
பாப்பொழியும் பெருநாளில் முஸ்லிம் மக்கள்
பண்பாட்டு எழுச்சிக்கு உறுதிகொள்வோம்!

20.09.2009 நவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே 01, 2009 அன்று உம்மு மஸீஹாவில் நடைபெற்ற**

**"எதிர்காலம் இஸ்லாத்திற்கே!"**

**என்ற அரங்கில் பாடப்பட்ட கவிதை.**

யகூதிகளே!
நஸாராக்களே
நாங்கள் மையத்தை அடக்குபவர்களாக
இருப்பதால்
நாங்களும்
மௌத்தாகிப் போய்விட்டோம்
என நினைக்க வேண்டாம்
நாங்களும்
ஹயாத்துடன் தான் இருக்கின்றோம்

எல்லா உலகிலும்
யகூதியத் பரவியதால்
இஸ்லாம் இல்லாது
போய்விடுமோ
என
எள்ளளவும் எண்ணாதீர்!
நஊது பில்லாஹ்!

கொன்று கொன்று
குவிப்பதுதான் - இந்த
சண்டாளப் பேர்வழிகள்
சரித்திரம்

முஸ்லிம்களின் மூக்கை
அறுத்து
வாய்க்குள் வைத்து
இஸ்லாத்தை சுவாசிக்கச்
சொல்கின்ற
இன்னுமொரு பரிமாணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீனத்தை
இரத்தக் காடாக்கிய
இரக்கமற்ற
இஸ்ரவேலர்களின்
ஊது குழல்தான்
அமெரிக்கா!!

வெள்ளை மாளிகை
கலரில் தான்
வெள்ளை!
கருத்தில் அது சிவப்பு
கணக்கும் அதில் நெருப்பு!

உலக நாடுகளின்
முஸ்லீம்களை
உணவற்று, உடுக்கையற்று
இருக்கையற்று
எழுப்பி அனுப்பும்
களகக் காறர்கள் தான்
யகூதிகளும். நஸாராக்களும்!

கூடார வாழ்க்கையை
எங்களுக்கு
அறிமுகம் செய்து நாடாளும்
வாழ்க்கையை
அவர்கள்
பார்க்கின்றனர்!

கஞ்சிக்கு கெஞ்சி நின்று
கியூவில் காக்குகின்றோம்
அல்லாஹ்வை அஞ்சிய
முஸ்லிம்களுக்கு - இந்த
அநியாயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கிலே எங்கள்
சமூகம்
கரியான - மையத்துக்களாகவே
கடைசிப் பயணத்தைத்
தொடங்குகின்றனர்.

ஆப்கானிஸ்தான் , ஈராக்
அதில் வாழும் மக்களினை
சூப்புக் காய்ச்சி
சுடர் மங்க வைத்து விட்டார்
அநியாயக் கார
அமெரிக்கா!

எஸ்.ஆர். சிக்னல்
குலொகாட்
எல்லாம் பெயரில்தான்
வித்தியாசம்
எல்லாமே
பல்லுத் துலக்கத்தான்!

கிளின்டன், புஷ். ஒபாமா
ஷெரோன்
பெயரில் தான் வித்தியாசம்
முஸ்லிம்களை
அழிப்பதில்
மூன்றுடன் நாலும்தான்

முஸ்லிம்களின் ..
வோர்ள்ட் கப்
மஸ்ஜிதுல் அக்ஸாதான்
வென்றெடுப்பது
நிச்சயம்தான்
பொறுத்திருப்போம்;
புகழ்காண்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேய மோகத்தில்
அரபுலகத் தலைவர்கள்
அச்சாறில் தோய்ந்த
உப்பு தேசிக்காயாய்
ருசிபட்டு நிற்கின்றார்
பாவம் மிதிபட்டுத் தவிக்கின்றார்
சரிபட்டு வரமாட்டார்.
சிறைகளில் வாழும்
முஸ்லிம்களை
ஆபாசச் செயல்களுக்கு
ஆளாக்கிவிட்ட
அமெரிக்க இராணுவம்
ஹாபிழ்களைக் கூட
தன்னினச் சேர்க்கைக்குள்
தள்ளிவிட்டார்கள்
எண்ணிப்பாருங்கள்
மன்னிக்கமுடியுமா
மகா யூதர் கூட்டத்தரை?

முகத்தில் சிரிப்பில்லாத
மூதேசிகள் எங்கள்
அகச்சிரிப்பையும்
அழிப்பார்கள்?

முஸ்லிம்களே!
இப்படித்தான் உலகம்
எகூதிகளின் கையில்
இருக்குமென ஏமாந்துவிட
வேண்டாம்

மஃதி வரும் போது
மாறுதல்கள் உண்டாகும்
கொடி போட்ட யகூதியத்
பிடி கழன்று கீழே விழும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தெறிந்து
அங்கெல்லாம்
ஊடறுக்கும்
இஸ்லாம் தான் !
பயப்பட வேண்டாம்
முஸ்லிம்கள்
உலகை ஆள்வார்கள்
முஹம்மத் நபியின் முத்தான
உம்மத்து - நாம் கழிசடைகளுக்கு
கால் மடிக்கத் தேவையில்லை!

நஸ்றானிய்யத்தின்
நரம்பின் பலம்
உடையும்!

ஈஸா நபி வரும்போது
இந்த யுகம்
இன்னும் மாறும்
அதுவரையில்தான்..
இந்த எலிக்காய்ச்சலும்
பன்றிக் காய்ச்சலும்
உணவில். குடிப்பில்
உடையில் . நடையில்
ஹறாத்தைக் கலந்து
நமக்கு ஸிறாத்தைக் காட்டுகிறார்!

ஹறாம். ஹலாலாகாது!
இவர்களின் அநியாயங்கள்
இறைப்பையை மட்டுமல்ல
கொல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயப் பையைக் கூட
இருட்டாக்கும்.
C.N.N. B.B.C போன்ற
ஊடகங்கள்
நிருவாணத்திற்கும்
நீச்சலுடைக்கும்
மேடைகட்டி
முஸ்லிம்களை
அருவருப்பாக்கிவிட்டது
உருப்படியாகாது - ஷைத்தானியத்
சுவர்க்கம் நுழையாது!

முஸ்லிம்களே!
கண்ணாடியை ஒரு முறை
கழட்டிப் போடுங்கள்
கண்ணாடி இல்லையெனில்
இமையை விரித்து
இனிதே பாருங்கள்!

நாளை இஸ்லாம் நமதே!
நமது வாக்கு ஓங்கும்
நமது நோக்கு ஓங்கும்
வீரத்தால் உலகத்தை
வெற்றி காண்போம்!
மார்க்கத்தை உலகத்தில்
மலரச் செய்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதி ஒழியும்
அக்கிரமம் அடங்கும்
ஆணவம் ஒதுங்கும்
அகிம்சை வளரும்
லாயிலாக இல்லல்லாஹ்
உலகை ஆட்சி செய்யும்
நன் நாள் வரும் நம்புங்கள்!
நம்புங்கள்!
நன்றி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பெருநாள்!

மாண்புடனே நோன்பிருந்தோம் நன்று
மனச் சாந்தி பெற்றோமே இன்று
கூன் பிறையின் வரவாலே இன்று
கூடி வாழ்வோம் தமிழ் முஸ்லிம் நன்று
சான்றோர்கள் இனங்களை மதித்த
சரித்திரத்தைக் கடைப்பிடிப்போம் நன்று
தூண்டுதலாய் ஒற்றுமையை வளர்ப்போம்
தூய நோன்புப் பெருநாளில் இன்று!

❖❖❖

படுகொலைகள். ஆள்தொலைதல் போன்ற
பாதகங்கள் வராதிருக்க வேண்டும்
கொடுமை மிகு அகதி முகாம் வாழ்க்கை
குவலயத்தில் ஒழிந்துவிட வேண்டும்
அடுப்பெரித்து அவரவரின் வீட்டில்
அடிப்படைகள் மீளமைய வேண்டும்
முடிவெல்லாம் நலமாக வேண்டும்
முகம் மலர்வோம் பெருநாளில் இன்று!

❖❖❖

சிறையினிலே விசாரணையற்று
சீரழியும் வாழ்வொழிய வேண்டும்
முறைகெட்டு வாகனத்தைக் கடத்தும்
முறைமைகள் மண்மூட வேண்டும்
பறைசாற்றும் ஒற்றுமைதான் நன்கு
பாரினிலே புகழ் பூக்க வேண்டும்
" பிறை" வரவால் வந்த இப்பெருநாள்
பீதியினைப்போக்கிவிட வேண்டும்!

**20.09.2009 தினக்குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுகள்!

அந்த டயருக்குள்தான்
அவள் பற்றி எரிந்தாள்
அது தான் . . . அவளது டயரி!

மனிதனை முடமாக்குபவன்தான்
மனைவியிடம்
ஒரு குழந்தைக்கு
வரைபடம் வரைகின்றான்!

ஆழ்ந்த நித்திரையில்
பகலில் தூங்குபவர்கள்
இராக் காவலர் மட்டுமல்ல!
இதயமில்லாது. . .களவாக
கழுத்தைப் பதம் பார்ப்பவர்களும்தான்!

எந்தச் சித்திரத்திற்கும்
வர்ணமிருக்கும்
தூரிகையில் மணமிருக்கும்
துப்பாக்கிக் கீறலுக்கு. . .
சிவப்பு நிறந்தான்
துவக்கில் புகை மணம்தான்
மிஞ்சும்!

நீ ஒரு புத்தகம் - ஆனால்
உன்னை வாசிக்க
உனக்கு நேரமில்லை அதனால்
உன் அட்டைப்படம்
தூசு படிந்திருக்கிறது.

**நவமணி 11.07.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மக்களை கிண்டல் செய்யாதீர்

இலங்ஜக நாட்டின்
இனிய பக்கம்
கிழக்கு மாகாணம்

கடல் நதி குளம்
வயல் மரம் செடி
கொடி நிலம் கொண்ட
நன்நகரம் அது!

நல்லவர் வல்லவர்
கல்விமான் நிறைந்த
சொல்லாட்சி வாதிகளின்
சுதந்திரத் தவம்!

தமிழர்கள் முஸ்லிம்கள்
சிங்களவர்
தலை நிமிர்ந்து நடக்கும்
புனித பூமி அது!

இவ்வூர்களைப் பார்த்து
இப்படி ஒரு அலட்சியம்
பாவம் செய்பவர்கள்
பல இலட்சம்
அதனால் தான்
கிழக்கு மக்களுக்கு
சோதனையாம்
கிண்டல் செய்கின்றனர்!

சூறாவளி, சுனாமி,
வெள்ளம், யுத்தம்
சுழன்று வருவதாய்
சொல்கின்றனர்!

தீர்ப்பளிக்கும் சமுதாயமே!
தீர யோசி!
வங்காள விரிகுடா
ஆழ்கடலின் கரையோரம்
வாடிக்கையாக வாழ்ந்து
வருகின்றோம்!

கடலின் அலைக்கும்
காற்றின் சுழற்சிக்கும்
நாங்கள் முகம் கொடுக்க
வேண்டும்தான்
நீங்கள் நகைத்தால்
சரிவருமோ?

கடற் பயண அரபிகள்
கடலோரம் வந்து
கல்யாணம்முடித்ததனால்
இன்று நாங்கள்
கரையோர மக்கள்
கடலின் ஆபத்தைத்
தாங்கத்தான் வேண்டும்
ஆற்றுக்கும் கடலுக்கும்
இடையேதான் நாங்கள்
வாழ்க்கையை
ஓட்டுகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு பெருக்கெடுத்தால்
அதற்கும் நாங்கள்
முகம் கொடுக்க
வேண்டும் தான்!

வயல் வெளியில்
நாங்கள்
வேளாண்மை
செய்கின்றோம்
குளம் - எங்களுக்கு
கட்டாயம் தேவை
அது போல் மழை
எங்களுக்கு மிக மிகத்
தேவை!

குளம் வெடித்து
நீர் வடிந்தால்
அதற்கும் நாங்கள்
முகம் கொடுக்க
வேண்டும்தான்!
அதற்காக -
கிழக்கினரை
பாவி எனச் சொல்லி
பகிடி விடாதீர்கள்!

வியாங்கல்லயில்
வெள்ளம்
வந்தது தெரியாதா?
இரத்தினபுரியின்
வெள்ளம் புரியாதா?
இது வெல்லாம் மிகவும்
தாழ்ந்த பிரதேசம் . . .

தென்பகுதியையும்
சுனாமி
தேடித்தாக்கியது
இன்னும் தடயம்
இருக்கவே செய்கின்றது!

மாலை தீவுக்கு
கடலினால் ஆபத்து
பங்களாதேஷுக்கு
கடலினால் ஆபத்து
உணர்ந்து பாருங்கள்
உற்றுப் பாருங்கள்!

வெள்ள நிவாரணத்தை
விரும்பிக் கொடுத்தீர்கள்
நன்றி நன்றி
மிக்க நன்றி
நன்மையைப்
பெறுங்கள்!
நகைக்காதே கிழக்கை!
நாடுங்கள் சுவனத்தை!
ஒவ்வொரு பிரளயத்தின்
உண்மையை
உணருங்கள்!
நன்மையைச்
செய்யுங்கள்
கண்டிப்பாய் ஏழையின்
வீட்டுக்கு பல
படிக்கட்டுக்கள்
இருக்காது . . .

**20.01.2011**
**விடிவெள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாபரி மஸ்ஜிதும்
# பாரதத் தூக்கமும்

பாரத நாட்டின் யோத்தித் தளத்தில்
பாபரி மஸ்ஜிதைக் கண்டோம்
மார்க்கச் செயல்கள் நிறைய நடந்து
மதிப்பின் இடமாய்க் கொண்டோம்
மூர்க்கத்தனமாய் ஹிந்துக்கள் சேர்ந்து
முற்றுகையிட்டார் அன்று
சீராம் மஸ்ஜிதை விழுவதற்குள்ளே
சேர்ந்து உடைத்தனர் சீறி!

பத்தொன்பது வருடங்கள் ஓடியே விட்டது
பாரினில் மாற்றங்கள் உண்டா?
உத்தம முஸ்லிம்கள் உணர்ச்சி பொங்கி
உரிமையைக் கேட்டனர் அன்று
நித்திய வாழ்வை நிலத்தினில் துறந்தனர்
நீதிக்குப் போராடி மடிந்தனர்
இத்தனை நடந்தும் இன்று வரைக்கும்
என்னதான் நடந்தது பாரீர்!!!

கம்பீர மஸ்ஜிதுள் ராமர் சிலையை
களவாகக் கொண்டே வந்து
மிம்பரில் வைத்துப் பூஜித்தார்கள்
மிலேச்சத் தனம் புரிந்தார்கள்!
வம்புக்கு சாதக நீதிபதிகளோ
வழிகளை திறந்து கொடுத்தார்.
பூமிகளை திறந்தே கொடுத்தார்
கம்பாகி நின்ற ஹிந்துக்கள் குரல் தான்
காலாக ஓங்கிடக் கண்டோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வழக்குகள்
முஸ்லிம்கள் கொடுத்தனர்!
என்னதான் நடந்தது பாரில்?
சத்தியமாய் அது நானூறு வருட
சாதனை வாய்ந்ததோர் மஸ்ஜித்
"அத்துவானி" ஹிந்துக்களுக்காக
அயோத்தியைச் சுற்றியே வந்தார்
செத்து மடிந்தனர் முஸ்லிம்கள் அன்று
சிறைவாசம் இருந்தனர் நொந்து!

அரசியல்வாதிகள் தங்களின்
வெற்றிக்கு
அரங்கேற்றம் செய்வதும், இவ்விடமே!
பெருமையாய் சொல்வார்
ராமர்கோயிலே
பெரிதாகக் காட்டுவேன் என்பார்
பொறுமையாய் ஹிந்துக்கள்
வாக்களிப்பார்கள்
பெருமையாய் மந்திரி வருவான்!
உரிமைகள் அற்று
முஸ்லிம்கள் வாழ்கிறோம்
ஊமையாய் ஆகிடுவோமா?

முட்டி முட்டி முழுவதும் இழந்தோம்
முஸ்லிம்கள் சோம்பியே விட்டார்
கட்டட்டும் கோயிலைக்
காரியம் நடக்கட்டும்
கஷ்டப்பட்டதே போதும்
விட்டுக்கொடுக்க ஒரு
சில முஸ்லிம்கள்
வியூகம் சொல்வது கண்டு
முட்டாள்கள் இவர்கள்
என்பதைத் தவிர
முன்மொழி வாக்கியம் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமை
அல்லாஹ்வின் மஸ்ஜித்!
அது தடைப்பட்டால்
தட்டி நாம் கேட்போம்
குடியொன்று வைக்கவோ
தொழில் ஒன்று செய்யவோ,
கூடாது முஸ்லிம்கள்!
இது ஸ்ரீராமர் பூமி
அடித்துச் சொல்கின்ற
நாள் வந்துவிட்டது
அயோத்தியில் அநியாயம் ஓச்சுது
படிப்பினை பெறுங்கள்
முஸ்லிம் சமூகமே!

05.02.2011 நவமணி



# அக்கினிக்குள் அல்குர்ஆன்
# ஆப்கானில் கவிழ்ந்தான்

இஸ்லாமியத்
தோழனே!
இன்னும் உறங்காதே!
எழு! எழு!
அல்லாஹ்வைத்
தொழு தொழு
உம்மத்தை யோசி!
★✸★
"நான் விழிக்கின்றேன்"
சமுதாயம் உறங்குகிறது
நான் உறங்கும் போது
சமுதாயம் விழிக்க வேண்டும்
அல்லாமா இக்பாலின்
இவ்வுரைகள் உன்
உள்ளத்தில் ஊடுருவட்டும்!
★✸★
திருக்குர்ஆனை
தீயிட்டுக் கொழுத்துவார்கள்
என்பது என்றோ
எமக்குத் தெரியும்!
அதனால் தான் . . .
அல்குர்ஆனில் 6666
வசனாங்களையும்
எங்கள் ஏழு வயசுப்
பிள்ளை கூட
இதயத்தில் சுமந்துள்ளது!
★✸★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிலிருந்து
அல்குர்ஆனை
பறித்தெடுத்த போதும்
ஹாபீஸ்களின்
கல்பிலிருந்து
வாசகம் வந்து
கொண்டேயிருக்கும்
***
ஆப்கானில்
அமெரிக்கர்கள்
செய்த
அநியாயம்
அல்குர்ஆனை தீயிட்டு
அக்கினிக் குளமாக்கியதை
எண்ணி. எண்ணி
எத்தனை இதயங்கள்
கண்ணீர் வடிக்கின்றன?
***
உன் எதிர்ப்புக்
கோஷம்
உனக்குள்ளேயே
வரவில்லை!
உன் உணர்வுகள்
அனைத்தும்
உறக்கம்!
இப்படி இருந்தால்
சமுதாயத்தை
எப்படிக் காப்பது?
***
இன்னும் படுக்காதே
எழும்பு! எழும்பு!!
இந்த உம்மத்தை
யோசி!
***

**04.03.2012 நவமணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுறங்கலாம்
# "கற்பு" றங்கலாமா?

நீ படு... உறங்கு...
நிம்மதியாய் தூங்கு!
நீ மட்டுமல்ல - உன்
நினைவுகளும்
தூக்கம் தான்
நினைவு படுத்துகின்றேன்
நீ முஸ்லிம் என்பதற்காக
எழும்பு இன்னும் தூங்காதே

மேற்கத்தய நாட்டவர்
அரபு நாட்டுக்குள்
மென் பந்து ஆடுகிறார்
வெளிவரும் பந்தைப் பிடிக்க
முஸ்லிம் நீ
ஒரு விக்கட் காப்பாளர்
பிடித்தாலும் பிடிப்பாய்
விட்டாலும் விடுவாய்!

ஆடவனை அங்கங்கள்
தெரிய வைத்து
பாடகி போல் ஆட வைத்து
குடிப் பழக்கத்தை
குடிபுகச் செய்து
ஆபாசப் படங்களை
அரங்கேற்றி வைத்தது
அந்நியச் சிந்தனைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானிஸ்தானில்
அல்குர்ஆன் பிரதிகளை
அந்நியப் படைகள்
தீயிட்டுக் கொழுத்தியதை
கனவிலாவது கண்டு - நீ
கண்டிக்க முயலவில்லை!

இன்னும் தூங்காதே
இதயத்தை உசுப்பிக் கொள்
முஸ்லிம் தோழனே . . .
சிந்தனைத் தூக்கம்
முற்றிலும் முஸீபத்து
கண்ணுறங்கினாலும்
"கல்பு"றங்கக் கூடாது
அடுத்த முஸ்லிம்கள்
பிரச்சினையை
ஏன் என்று கேள் . . .
அப்போது தான் நீ
ஒரு முஸ்லிம்
இது என் சிந்தனையல்ல
ஏந்தல் நபி சிந்தனை

சீமானிய நாடுகளின்
சீரழிவில் சிக்காது
ஈமானிய உள்ளத்தில்
இன்ஸானாய்
வாழப் பார்!

**08.03.2012 விடிவெள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் எம்.பீக்கள் முஸாபஹா செய்வார்கள்?

எமது இஸ்லாமிய
எம்பிக்கள், மந்திரிமார்
ஒருவருக்கொருவர்
கைகொடுத்து
ஸலாம் - கூறும் நாள்
முன்னால் வருகிறது.
முனைவு வலுக்கிறது.

❦ ❦ ❦

சபைகளிலே எம்பிக்கள்
சந்தித்துக் கொள்வார்கள்
ஸலாத்தையும் கூட
சொல்லிக் கொள்வார்கள்
கதைக்க மாட்டார்கள்
காரணம் - பின்னால்
கட்சிக்காரர்கள்!

❦ ❦ ❦

தம்புள்ளைப் பள்ளி
தரைமட்டமானதற்குப்
பின்னராவது பிறக்காதா ஞானம்?

❦ ❦ ❦

கட்சிகள் தான் எம்நாட்டில்
உட்பூசலுக்கு
உறவு வகுத்தன
கட்சிகளில் லயித்துத்தான்
ஒற்றுமையை
காணாமல் ஆக்கிவிட்டோம்
கட்சிகள் இல்லாமல்
ஆட்சிக்கு வரலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகள் என்றால்
கருத்துக்கள் கூட
"கலர்" மாறி நிற்கும்
இந்நிலையில் . . .
எம்நாட்டு
இஸ்லாமிய எம்பிக்களை
சட்டப்படி அழைத்து எப்படி
சந்திக்க வைக்கலாம்?
ஸலாம் கூற முனையலாம்?

* * *


சந்திப்பு மட்டுமல்ல
முக்கியம்
சகோதரத்துவமாய் இந்த
சமூகத்தின்
கல்வி, தொழில், கலாசார
முன்னேற்றம்
எல்லாம்
நடக்க முடியாத
கால் சங்கிலிகள்
உடைத்து சங்கிலியை
உயர் பணிகள் செய்யுங்கள்
நீங்கள் சமூகத்துக்காய்
எதுவும் செய்யாதவர்களல்லர்
செய்யவில்லை என்பவன்
சீரிய புத்திக்காரனுமல்லன்!
உங்கள் சேவை வலுக்க
இன்னும் சமூகத்துக்குச்
செய்ய எம்பிக்களே! மந்திரிகளே!
இணையுங்கள்!
இவ்வழைப்பு பிரதேச
மாகாண மந்திரிகளுக்கும் தான்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை எனும்
கயிற்றை
பற்றிப் பிடியுங்கள்
பிரிந்து விடாதீர்கள்
அல்குர்ஆனின் இந்த
அரிய வசனத்தை
எல்லா எம்பிக்களும்
எடுத்துச் சொல்வார்கள்!
நடந்தது ஒன்றுமல்ல...
அல்குர்ஆனின்
ஒற்றுமை வசனம் மட்டும்
வலுவாக நிற்கிறது - அது
வான்மறையில் எழுத்துக்களாக
இருக்கவே இருக்கிறது!

**13.05.2012 நவமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை முடிந்தும் பொழுதும் விடிந்தது!

வேலுப்பிள்ளை
பிரபாகரனின்
ஈழத்துப் போரின்
நீளத்தை வெட்டியவர்
ஆளும் ஜனாதிபதி
மகிந்த ராஜபக்ஷ தான்
நாளும் மக்கள் நன்றியுடன் . . .

அழுவோரும் உண்டு!
ஆத்திரப்படுவோரும் உண்டு!
எனினும் . . .
கால்கடுக்க நின்ற
செக் பொயின்டுகள்
கண்மூடிக் கொண்டது
சாமிகள் இருந்த – கோயில்களில்
ஆமிகள் இருந்தனர்
இப்போது – சாமிகளே இருக்கின்றார்கள்!

வீதிகள் அமைத்து
வடக்குக், கிழக்குக்கு
வழிவாகச் செல்ல
செல் விழாது செல்ல
நல்ல அமைப்புக்கள்!
ஆனால் . . .
மழைவிட்டது போல்
தூவானமும் நின்று விட்டால்
துயரம் மறைந்து விடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மண்டேலா!

மண்டேலா
குணத்தைக்
கண்டீரோ?
அன்றும், இன்றும்
இனவெறியை
எதிர்த்தார்
இன்று அவர் புகழை
ஒன்றொன்றாய் ஓது
என்றும் மண்டேலா
இதயத்தை வென்ற இமயம்!

✣✣✣✣✣

வெள்ளையரைக்
கொன்று
வேடிக்கை பார்க்காமல்
அவரில்
நல்லவரை, நால்வரினை
அணுகி - நலமாகப் பேசி
பொல்லாத இனவெறியை
பூவுலகில் போக்கி
கறுப்பருக்கும் வாழ
களம் அமைத்த
மண்டேலா
இறந்துவிட்டீரா?
இவ்வுலகமே துக்கம்!

✣✣✣✣✣

காந்தி அடிகளுக்குப் பின்னர்
மாந்துகின்ற – நீதியை
மண்மீது
எடுத்தியம்ப
சிறை வாசம் செய்தீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டேலா!
காந்தியைப் போல்
சட்டம் படித்து
கறுப்பு இனத்தவரின்
கொட்டத்தை அடக்க
கொண்டிருந்த சட்டத்தை
வெட்டி வீழ்த்தி
விடுதலை தந்த
மண்டேலா - இன்று
மரணித்துவிட்டீர்கள்

ஓரே கொள்கையில்
உதயத்தைத்
தொட்டவனே!
பூக்களுக்குள்ளே
புன்முறுவல் பூப்பவனே!
உலகத் தலைவர்கள்
உன் முன்னே நிற்கின்றனர்!
உண்மையிலே. . .
உன்னை வாசிக்கும் நீதி!
உன்னில் சுவாசிக்கும்
அமைதி!

தினகரன் வாரமஞ்சரி
15.12.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானத் தந்தை மண்டேலா!

கறுப்பு இன மக்களின்
கனவை நிறைவேற்றி
காட்டு தர்பார்
காட்டும்
வெள்ளையரின் - தலை
வீக்கத்தை உடைத்தெறியப்
புறப்பட்ட பூமகனே!
மண்டேலா — உம்மை
மண்டலங்களும் கூடப்
பாராட்டும் - உம்மிடம்
மனிதம் இருக்கிறது!

✱✱✱✱

கறுப்புக் காகத்தை
துரத்திவிட்டு
வெள்ளைப் புறாவை
பறக்க வைக்க
வெள்ளையர் நினைத்த
போது . .
ஆபிரிக்காவிலே
சீட்டத்தை ஆராய்ந்து
காகமும் புறாவும்
கைகோர்த்து நிற்க
சட்டத்தை மாற்றிய
சற்குணரே மண்டேலா!

✱✱✱✱

விட்டுக் கொடுக்கின்ற
மனப்பாங்கை
விதைத்த பெருமகனே
மரணம் தான் - உம்மை
விடாமல் அணைத்துக்
கொண்டது!

06 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி அடிகளுக்குப்
பின்னர்
நீதிக்கு ஒரு மகன்
நிலைக்க வேண்டுமென
வீதிக்கு வந்த மக்களுக்கு
விடையே கிடைத்தது!
நடையில் நிகழ்ந்தது
நெல்சன் மண்டேலா
சொல், செயலின்
தலைவன் என்று!
உலக சமர்தானத்திற்கு
உமரின் ஆட்சியைக்
கேட்டார் காந்தி
மண்டேலா நீங்களும்
அதற்குள் புகுந்து
கொண்டீர்கள்!

❋❋❋❋

மண்டேலா நீங்கள்
இனச் சண்டைக்கு
முடிச்சுப் போட்டு
சமாதான நோபல் பரிசை
சட்டப்படி வாங்கினீர்கள்.
உலக சமாதானத்திற்கு
நீங்கள் வைத்த
அடிக்கல்
இன்று உங்கள்
சமாதியிலே
உரத்துச் சொல்லப்படுகிறது
மண்டேலா ஒரு சமாதானத்
தலைவர் என்று!

**நவமணி 15.12.2013**

06 DEC 2021
LIBRARY
704454
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்நூலாசிரியரின்
பிற நூல்களிற்
சில....













ISBN978-955-54528-4-7

250.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org